# அன்பின் அலைகள்

புஷ்பா கிறிஸ்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அலைகள்

## புஷ்பா கிறிஸ்ரி

உலகத் தமிழர் பதிப்பகம்
4, சௌராட்டிரா நகர், 7ஆவது தெரு,
சூளைமேடு, சென்னை - 600 094.
பேசி : + 91 9444111951/+ 91 44 65180155
மின்னஞ்சல் : eramathi@gmail.com
eramathi@rediff.com
utpmathi@yahoo.co.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அன்பின் அலைகள் |
| ஆசிரியர் | : | புஷ்பா கிறிஸ்ரி |
| பொருள் | : | கவிதைகள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | முதல் பதிப்பு சூன் 2013 |
| பக்கங்கள் | : | 96 |
| தாள்வகை | : | 70 ஜி.எஸ்.எம். வெள்ளைத்தாள் |
| அச்சுப் புள்ளி | : | 12 புள்ளி |
| நூல் அளவு | : | டெமி (14 X 21 செ.மீ.) |
| வெளியீடு | : | **உலகத் தமிழர் பதிப்பகம்**<br>4, சௌராட்டிரா நகர், 7ஆவது தெரு,<br>சூளைமேடு, சென்னை - 600 094.<br>பேசி : 00 91 9444111951/<br>+ 91 44 45538163<br>மின்னஞ்சல் : eramathi@gmail.com<br>eramathi@rediff.com<br>utpmathi@yahoo.co.in |
| விலை | : | ரூ. 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்


என்னைக் கருவாக்கி
உருக்கொடுத்த என் தந்தைக்கும்...

என்னைக் கருவறையில் சுமந்து
பெற்றெடுத்து உயிர் தந்த என் தாய்க்கும்...

எனக்குத் தத்துவ அறிவுரை சொன்ன
என் அப்பையா ஆச்சிக்கும்...

இப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

வானிலிருந்து இவர்கள் வழங்கும்
ஆசீர்வாதம் என்னை வாழ வைக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்வ அலைகள்!

முனைவர் ஒளவை நடராசன்
(முன்னாள் துணைவேந்தர்)

கனடா நாட்டில் புலம் பெயர்த்து வாழும் திருமதி **புஷ்பா கிறிஸ்ரி** அவர்கள் தமிழ் முதுகலை படிக்கும் ஆர்வம் ததும்பத் தம் புலமைச்சுடர்களைக் கவிதைகளாகப் புனையத் தொடங்கிய ஆர்வமே **அன்பின் அலைகள்** என்ற பெயரில் அமைந்துள்ளது.

ஆர்வத்தால், அழகிய தொடர்களை அடுக்குவதால் மனத்தின் நினைவுகளை வந்தவாறே எழுத முற்படுவதாலேயே கவிதை வடிவம் பெற்றதாகக் கருத முடியாது. எனினும் தத்தித் தவழும் மழலையைப் போல இலக்கிய முற்றத்தில் புலமைத் தளிராக புஷ்பா அவர்கள் உணர்வுகள் ஓங்கி மிளிர்கிறார்.

'கால ஓட்டத்தில் ஒரு கட்டுமரமாக ஒதுங்கிய நான் என் வாழ்வில் பார்த்துப் பேசி, பழகிக் கேட்டு உணர்ந்த நிகழ்வுகள் மனத்தில் பதிந்தபடி இந்தக் கவிதைகளாக மலர்ந்துள்ளன' என்று திருமதி புஷ்பா குறித்துள்ளார்.

கனவில் வந்துபோகும் சிற்றூர் நினைவுகள், பனை மரத்துக் கிளியோசை, தென்னைக் குயில்களின் தித்திப்புப் பாடல்கள், வனப்பு மிகுந்த வயல்வெளிகள் என்று தம் நினைவுகளையெல்லாம் மீள நினைத்துப் பார்க்கும் நன்முயற்சி யாக இத்தொகுதி திகழ்கிறது.

கடல் கடந்து நெடுந்தொலைவு சென்றபிறகும் வாழ்ந்த நாட்டை மறவாமல் வாழும் நாட்டுக்கு நன்றி பாராட்டும் அவருடைய பண்பாடு நம்மை நெகிழ்விக்கிறது. அன்பின் அலைகள் ஓய்வில்லாமல் நாளும் பண்பாட்டுப் பண்பாட வாழ்த்துகிறேன்.

தமிழினக் காவலராக உலகத் தமிழர்களின் மீது மாறாத பரிவுகாட்டி வரும் நண்பர் தமிழ்ச்சுடர் திரு. **இரா. மதிவாணன்** அவர்கள் அயலகத் தமிழர்களுக்கு ஆக்கம் தருவதற்கு முன் நிற்பவர். எதிர்காலத்தில் கவியரசியாராகத் திகழும் தகுதியை வளர்த்து வரும் திருமதி புஷ்பா கிறிஸ்ரியின் நூலை அவர் என்னிடம் அன்போடு வழங்கி வாழ்த்துரை நல்க வேண்டி யதையும் இந்நூலைப் பதிப்பித்துத் தந்துள்ளதையும் நன்றி யோடு பாராட்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடரும் கவிதைகளுக்கோர் தோரண வாயில்

கவிமாமணி இலந்தை சு. இராமசாமி, சென்னை.

உள்ளத்தில் ஓடுகிற உணர்வாற்றில் கொந்தளிப்பை உற்பவித்து வெள்ளமெனப் பாய்ச்சுகிற நிகழ்ச்சி பல வீதியிலும், வேறெங்கேயும் கொள்ளையிட முயலுகையில் கொதிக்கின்ற கவிதை மனம் கொள்ள வேண்டும். அள்ளிவரும் வார்த்தைகளோ அனல்குளித்துக் கவிதையிலே ஆட வேண்டும்.

வெறும் சொற்குவையால் நடக்காமல் உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்த கவிதைகளின் தொகுதி இந்த நூல்.

சுயானபலத்தின் அடிப்படையில் கவிதை முகிழ்க்கிற போது கவிஞர் பெற்ற அனுபவம் அதைப் படிக்கிறவனின் அனுபவமாகப் பரிணமிக்கிறது. பரவசத்தில் துள்ளுகிறான்; சோகத்தில் துவளுகிறான். அப்படி உணர்வுகள் பலவற்றைச் சுமந்து வருகிற கவிதைகளின் ஊர்வலமாக அமைந்துள்ளது இத் தொகுதி. இவை அனைத்தும் கவிதைத் தெறிப்புகள். இக்கால நெறிப்படி எழுதப்பட்ட புதிது வடிவக் கவிதைகள்.

இலக்கணப் புலவன் எவ்வளவுதான் நேர்த்தியாகக் கவிதை எழுதினாலும் மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு அவனுள்ளத்துள்ளே பரிவு தோன்றி அது அவன் கவிதையில் பிரதிபலிக்கவில்லையென்றால் அவன் எழுதுவது கவிதையே இல்லை என்கிறான் பாரதி. இக்கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகளில் பெரும்பாலும் மற்றவர் துயரங்களில் பங்கேற்கிற அந்தப் பரிவு உணர்ச்சி வெளிப்படுவதைக் காணுகிறோம். அதனாலேயே அந்த அனுபவத்தில் நாமும் பங்கேற்கிறோம்.

சகோதரி புஷ்பா கிரிஷ்டியின் கவிதைகளில் சில அவரது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே நடப்பவை.

அப்பாவின் மரணப்படுக்கை, அலுப்பில் துயிலும் அம்மாவின் தூக்கம், பள்ளிக்குச் செல்லும் குழந்தை, அப்பாவுக்குப் பயந்து அம்மாவைத் துயிலெழுப்ப வேண்டுவது எனப் பல கவிதைகள் வீட்டிற்குள்ளே நடப்பவை; கவிஞரின் நேரடி அனுபவத்தால் விளைந்தவை.

வெளியில் நடக்கும் நிகழ்ச்சிகள் - அது ஒரு தனி மனிதனுக்கோ, விலங்கினத்திற்கோ அல்லது சமுதாயத்திற்கோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கோ பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றால் அப்பாதிப்பு கவிஞரின் மனத்தையும் பிடித்து உலுக்கியிருக்கிறது. பாதையில் கொட்டிக் கிடக்கும் பனியைத் தள்ளுகிறபோது ஏதோ காலில் தட்டுப்படுகிறது.

*'ஒருவாறு நிமிர்ந்து*
*நடந்து பார்க்கையில்*
*கால்களில் தடுக்கிடுகிறது*
*இருட்டில் தெரியவில்லை ஒன்றும்*
*இரவு பத்து மணி.*
*என்ன அது?*
*ஓ..ஓ..அது ஒரு பூனை*
*ஆ..என்ன இது!*
*மரணித்து மரத்துக் கிடந்தது*
*அந்தப் பூனை!*
*பசிக்கு உணவு தேடி வந்து*
*ருசிக்க முடியாத போது*
*பனியில் மூடப்பட்டு*
*மரணித்துப் போன*
*ஒரு ஜீவன்!*
*மனிதனுக்குச் செய்வது போல்*
*ஒரு மரியாதைச் சவ அடக்கம்*
*அத்தனைதான் செய்ய முடியும்*
*இந்த அடாத குளிரில்!*
*இந்த ஆன்மாவும்*
*சாந்தி பெறட்டும் ஆண்டவா!'*

அந்தப் பூனைக்காகக் கொண்ட பரிவு மனம் அந்தக் கவிதையின் மூச்சாக வெளிப்படுகிறது.

'பகல் முழுவதும்' என்னும் கவிதை உள்ளத்தைக் கவ்வும் ஒன்று. பயணம் போய்விட்டு வீடு திரும்புகிறபோது அங்கே தென்படுகிற காட்சி எதுவும் கவிஞரைப் பாதிக்கவில்லை. ஆனால், முத்தாய்ப்பாகப் பால்கனியில் கண்ட காட்சி அவர் கண்களை நனைத்துவிடுகின்றது. அது என்ன?

*'பால்கனியின் பெட்டி மறைவில்*
*இருந்த அந்த மாடப் புறாவின்*
*முட்டை உடைந்தது கண்டு*
*என் கண்கள் பனித்தன...*
*இது யார் செய்த பாவமோ?'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாடப்புறாவின் முட்டை பால்கனியில் உடைந்திருப்பதைக் கண்டு கவிஞரின் மனம் பதறுகிறது; கண்கள் பனிக்கின்றன. இதுதான் பரிவு. இந்த இழிசெயலை எந்தப் பாவி செய்திருக்கிறான் என்று கேட்டிருந்தால் அந்தப் பாவியின் மேல் கவிஞரின் கோபம் விழுந்திருக்கும். ஆனால், அப்படிக் கேட்காமல் இது யார் செய்த பாவமோ என்று கேட்டிருப்பதால் பாவச் செயல் யாரோ செய்துவிட்டானே என்ற வேதனை வெளிப்படுகின்றது. அந்த வேதனைகூட ஒரு பரிவு உணர்ச்சிதான்.

பதிவுகள் என்னும் தலைப்பில் ஒரு கவிதை. அதில் பெரியவளான நிகழ்ச்சியைக் குறிக்கிறபோது,

*'இயற்கையும் என் உடலும்*
*இனிமையாய்ச் செய்த கொடுமையால்*
*நான் ருதுவான போது*
*என்னை வாழ்த்திய பக்கத்து வீட்டு*
*என் சிங்கள உறவினர் குடும்பம்*
*எனக்கு நினைவிலில்லை'*

என்கிறார் கவிஞர். இனிமையாய்ச் செய்த கொடுமை என்பது எவ்வளவு தெளிவாக அந்நிலையைச் சுட்டிக்காட்டி விடுகிறது.

மயானத்து மரங்கள்கூட இவருடைய கவிதைப் பொருளாகியிருக்கின்றன.

கவிஞர் இலங்கைத் தமிழர் என்ற காரணத்தால் ஈழத்தில் நடந்த கொடுமைகள் அவரை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. அழிவைக் கண்டும் எந்த வெளிப்பாடும் இல்லாதிருந்தவர்களை எண்ணி வேதனைப்படுகிறார்.

*'கூட்டைப் பிரித்து*
*குருவிகளைக் கலைத்துக்*
*காட்டை அழித்து*
*நாட்டைப் பிடித்துவிட்ட*
*காட்டு மிராண்டிகளைப்*
*பாட்டில் பாட மனமில்லை.*
*ஆவி துடித்து அழுது*
*நெஞ்சு தவித்துக் கனக்கிறது.*
*பாவித் தமிழினத்துக்கு*
*ஞாலத்தில் விடிவில்லையா?'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அந்த வேடிக்கை மனிதர்களின் இழிநிலையைச் சுட்டிக் காட்டிவிடுகிறார்.

பெற்றோரின் மேல் கவிஞர் கொண்டிருக்கும் பாசம் இரண்டு கவிதைகளில் வெளிப்படுகிறது. அப்பா மரணப் படுக்கையில் இருக்கையில் தனக்குக் குழந்தை பிறக்கப்போகும் சமயத்தில் அப்பா மரித்தால் மற்றவர்கள் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையைக் குற்றம் சாட்டுவார்களே என்ற வேதனையும் தான் பிரசவ வேதனையில் துடிக்கும்போது தந்தை மரணத்தை நெருங்குகிறாரே என்ற வேதனையும் அந்தக் கவிதையில் வெளிப்படுகின்றன. அந்தக் கவிதையை முடிக்கும் போது,

*'இன்னும் கொஞ்ச காலம்*
*வாழ்ந்திருக்கலாமே அப்பா.*
*அ.ப்..பா..அ..ப்...பா அ...ப்...பா..'*

என்று எழுதியிருப்பதில் கவிஞரின் வேதனை ஓலத்தைக் கேட்கிறோம்.

அம்மா தூங்க மறுக்கிறார் என்ற கவிதையில்

*'இனி இரவுத் தூக்கமா?*
*இல்லை மறுநாள் இரவு...*
*அதுவும் ஏமாற்றினால்,*
*நித்தியத் தூக்கம் தானே!*
*நிரந்தரமாய்த் தூங்கும்*
*எதிர்பார்ப்புடன்*
*தூக்கம் கலைகிறார் அம்மா!'*

என்ற கவிஞரின் வரிகள் நம் நெஞ்சைப் பிசைகின்றன.

அந்தத் தாயின் அன்புக்கு இந்த நூலைச் சமர்ப்பித் திருக்கிறார்.

இன்னும் எத்தனையோ எடுத்துச் சொல்லலாமென்றாலும் இந்த முன்னுரையை ஒரு தோரண வாயிலாக மட்டும் காட்டியுள்ளேன். உணர்வுக் கவிஞர் புஷ்பா கிறிஷ்டியின் கவிதை மாளிகைக்குள் சென்று சுவைக்க உங்களை அழைக்கிறேன்.

உணர்வுக் கவிஞர் புஷ்பா கிறிஷ்டியின் கவிதைத்திறம் மேன்மேலும் வளரட்டும் என வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்கதிர்போல் புஷ்பா கிறிஸ்ரி மாண்பும் வளர்கவே!

கவிச்சுடர் **வி. கந்தவனம்,** கனடா.

அன்னம்போல ஆயுமறிவு பெற்ற அழகியார்
பொன்னைப்போலக் கவிதைபாடும் புஷ்பா கிறிஸ்ரி
உன்னுமுணர்வை உலகுசுவைக்க உந்து சக்தியால்
கன்னலாக்கிக் கவிதையாகப் பாடிக் களிப்பவர்!

அவ்வைபோல அவ்வப்போது யாத்த வற்றிலே
செவ்வையான வற்றைச்சேர்த்துச் சிறந்த தொகுதியாய்
வவ்விமக்கள் படித்துமகிழ வாழும் தமிழிலே
பவ்வம்போல ஒளிர்விந்தப் பாருக் களித்தனர்!

கீதவாணிக் கவியரங்கில் கிளியின் குரலிலே
போது மல்கிப் பொலியும் நல்ல புதுமைக் கவிதைகள்!
காதில் கொஞ்சிப் புஷ்பா நன்கு கசிந்து பாடுவார்
காதலோடு நேயர்கேட்டுச் களித்துச் சுவைக்கவே!

பூட்டிக் கிடக்கும் உணர்வைப் பாட்டில் புதுக்கிப் பொழிபவர்
ஊட்டி வெறியைப் புஷ்பா கிறிஸ்ரி உலுப்ப வல்லவர்!
நாட்டி வாழ்வின் நன்மைதீமை ஞானம் பிறக்கவே
தீட்டி மக்கள் சிந்தை நன்கு தெளிய வைப்பவரே!

கவிஞர் கரவு வஞ்சமற்ற காட்சி மிக்கவர்
அவர்கள் மக்கள் இனிதுவாழ ஆசை கொள்பவர்!
கவிஞர் விதியை மாற்றி நல்ல கதிய ளிப்பவர்
அவர்கள் வழியில் புஷ்பா கிறிஸ்ரி ஆற்றல் வாழ்கவே!

அன்பின் அலைகள் என்னுமிந்த அழகுத் தொகுதியும்
துன்பம் போக்கித் துணிவளித்துக் கவிதைச் சுவையினால்
இன்பத் தமிழுக்(கு) அணிசெய்தென்றும் இனிது வாழ்கவே!
மன்கதிர்போல் புஷ்பா கிறிஸ்ரி மாண்பும் வளர்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம்
அண்ணாமலை பல்கலைக் கழகம், கனடா வளாகம்

பாட்டுத் திறத்தாலே பாரினைப் பாவித்திடல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் கவி படைத்து இருபதாம் நூற்றாண்டில் கவிதை இலக்கியத்திற்குத் திறவுகோலாக அமைந்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அவருக்குப் பின்னர்த் தமிழ்க் கவிதை முன்னணி வகிப்பது இலக்கிய ஆர்வலர் அனைவரும் அறிவர். திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, இலக்கிய மாசிகைகள், பத்திரிகை, இணையத்தளம் என அனைத்திலும் கவிதை பெருக்கெடுத்து ஓடுகின்றது. புதுப் புதுக் கவிதை யாளர்கள்தம் ஆற்றல்களை வெளிப்படுத்திக் கொண்டிருக் கின்றனர்.

கவிவாணர்களால் மட்டுமே கவிதை படைக்க முடியும் என்ற நிலைமை மாறி, இன்று தமிழ் உணர்வும் எழுத்தாற்றலும் சமூக நோக்கும் கொண்ட எவரும் கவிதை எழுதலாம் என்னும் நிலைப்பாடு யதார்த்தமாகி உள்ளது. இணையத் தளங்களிலே கவிதை படைப்போரின் ஆக்கங்கள் அனுபவ வெளிப்பாடாகவும் ஆவேசக் கணைகளாகவும் உள்ளன. தமிழர் புலம்பெயர்ந்து வாழும் கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலான இடங்களிலே மாதம் ஒரு கவிதை நூல் வெளியீடு என்ற அடிப்படையில் கவிதைப் படைப் பாளிகள் வேகமாகச் செயற்படுகிறார்கள். ஆயினும், அவர்கள் கவிதையின் தரம், சமூகப் பயன்பாடு என்பவற்றைப் பெரிதும் கவனிப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் அவர்கள் அனை வரது படைப்புகளும் வரவேற்கப்பட வேண்டியவையே.

இப் பின்னணியில் எம்மிடம் தற்போது தமிழ் முதுகலை மானிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் திருமதி புஷ்பா கிறிஸ்ரி அவர்கள் இக் கவிதை நூலைப் படைத்துள்ளார். கனடாவில் தமிழ் விண் என்னும் தொலைக்காட்சியில் அவர் ''குறிஞ்சிச் சாரல்'' நிகழ்ச்சியை நடத்தியபோது அவரது தமிழ் உணர்வையும், சமூக அக்கறையையும் அவதானித்தேன். அந்தச் சூழல் அவரைக் கவிதை படைக்கத் தூண்டியிருக்கலாம் என்பது எனது அனுமானம். இவரது கவிதை உணர்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை வளமும் பல்வேறு தளங்களிலிருந்து வெளிப்படு கின்றன. தான் பிறந்த ஈழத் திருநாட்டின் வனப்புகளையும் தன் இளமைப் பருவத்தில் வீட்டிலும் நாட்டிலும் பெற்ற அனுபவங் களையும் அவர் பல கவிதைகளில் அழகுற வடித்துள்ளார்.

*'காலை எழுந்து கடவுளைத் தொழுது*
*தேனீருக்குத் தண்ணீர் அடுப்பில் வைத்து*
*மாடுகறந்து பால்காய்ச்சி அவர்போடும்*
*சுக்குக் கோப்பி நாருசி சொல்லும்'*

இது போன்ற தாயக மண்வாசனையை வெளிப்படுத்து கின்ற இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் படித்துச் சுவைக்கத் தக்கவை. அவர் துணிந்து பல சமூக சீர்திருத்தக் கருத்துகளைத் தன் கவிதைகளில் ஆங்காங்குத் தருவது இக்கவிதைத் தொகுதிக்கு ஒரு கனதியை அளிக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழரின் தாயகம் எது என்பதில் புதிய தலை முறையினர் இடையே வாதப் பிரதிவாதங்கள் நடைபெறும் இக் காலகட்டத்தில் துணிந்து தன் கருத்தைக் ''கனடா வாழ்த்து'' என்ற தலைப்பில் வரும் கவிதையில் பின்வருமாறு மொழிகிறார்.

*வந்தோரைக் கரம்நீட்டி வரவழைத்து வாழ வைத்தாய் !*
*சந்தோசம் தந்து சாப்பிடவும் தந்திட்டாய்!*
*எம்தேசம் சோகம் கண்டு எம்மைத் தேற்றினாய்!*
*இனியொரு தாய்நாடு எம் கனெடிய நாடே!''*

சிகரட் புகைத்தல் உலகில் உள்ளோரின் உயிரைக் குடிக்கும் நோய் என்பதைப் பற்றி எழுதாத ஊடகமே இல்லை. புஷ்பா கிறிஸ்ரி அவர்களும் ''யாருக்காகப் புகைக்கின்றாய்?'' என்று வினா எழுப்பிப் புகைத்தலின் கேட்டினைப் பாடுதல் வரவேற்கத் தக்கதாகும். இது போன்றே ''காகிதம்'', ''மனிதம்'' பற்றிய கவிதைகளும் அகத்தைத் தொடுவனவாக உள்ளன.

கவிதைத் துறையில் காலடி எடுத்து வைத்துள்ள புஷ்பா கிறிஸ்ரி அவர்கள் இப்பாதையில் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அவரது கவிதை முயற்சிகள் நலமாகவும் வளமாகவும் வளர என் வாழ்த்துகள் உரித்தாகுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இனத்தின் தலையை நிமிர்த்தும்!

புலவர் வெற்றியழகன், சென்னை.

பெண்ணைத் தமிழர் பெட்டியில் அடைத்திலர்
கண்ணெனக் காத்தனர்! கவிஞர் ஆக்கினர்!
காப்பியர் வள்ளுவர் காத்தனர் பெண்மை
கூப்பியே வணங்குவம் கூறிய துண்மை!
''அன்பின் அலைகள்'' ஆழ்கடல் மணிகள்
பண்பின் முளைகள் பைந்தமிழ் அணிகள்!
ஈழம் தந்த ஈட்டி முனைதான்
வேழப் பாய்ச்சல் வெள்ளை ''மலர்''தான்

கவிதை மணத்தின் கவிஞர் ''புஷ்பா''
புவியைப் புரட்டும் நெம்பு கோல்தான்!
தமிழின் பற்றைத் தாங்கி நிற்கும்
இமய முகடே இந்த ''மலராள்!''
படைத்த கவிதை பாரை நிமிர்த்தும்
அடைத்த கதவை அடித்துத் திறக்கும்!
கால வெள்ளக் கடலின் நுரையை
ஞால முழுதும் நனைக்க இறைக்கும்!

தமிழென் மொழியைத் தரணி பரப்பும்
தமிழர் இனத்தின் தலையை நிமிர்த்தும்!
ஈழத் தமிழர் இன்னல் துடைக்கும்
ஈழ நாட்டை இனிது படைக்கும்!
கோழை மனத்தர் கூனல் நிமிர்த்தும்
வாழை மனத்தர் வாழ்வை உயர்த்தும்!
அஞ்சி வாழ்வோம் அச்சம் போக்கும்!
கெஞ்சி வீழ்வோர் கீழ்மை நீக்கும்!

கருத்து மழைதான் கவிதை என்பது
நெருப்புக் கனல்தான் நெய்யுங் கவிதை!
படித்துச் சுவைக்கவா படைக்குங் கவிதை
துடித்துநாம் எழவே தொடுக்குங் கவிதை!
இந்தக் கவிதை அந்தப் பணியை
முந்திச் செய்யும் முயன்று முனைந்து!
வாழ்க ''மலராள்!'' வாழ்க! வாழ்க!
வாழ்க நெடுநாள்! வண்டமிழ் தழைக்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் தமிழ்க் கருவூலம்!

இன எழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன், சென்னை.

பூத்தமலர் சோலைக்குள் புகுந்த போது
புத்துணர்வு நாம்பெறுவோம்! படகில் ஏறி
ஆர்த்தெழுந்த அலைகளைநாம் தாண்டும் போது
அதிசயத்தில் மிதந்திருப்போம்! பெரியார் பேச்சில்
கூர்த்தமதி தன்மானம் குதித்த தாலே
குனியாது நாம்நிமிர்ந்தோம்! தமிழ்ப்பண் பாட்டின்
வேர்த்தொகுப்பாய்த் திகழ்கின்ற புஷ்பா பாட்டு
வேர்ப்பலாவில் தேன்கலந்த குளுமைக் கூட்டு!

பெண்ணுரிமை பாடுகின்றார்! பிறந்து வாழ்ந்த
பிறப்புரிமை பாடுகின்றார்! உரிமை வேட்கை
மண்ணுரிமை பாடுகின்றார்! மகளிர் கொண்ட
மனப்புழுக்கம் பாடுகின்றார்! தமிழு ணர்வைத்
தண்ணீராய்ப் பாய்ச்சுகின்றார்! குப்பை மீது
தணல்பரப்பிப் பாடுகின்றார்! புதுக் கருத்தைப்
பண்ணிசைத்துப் பாடுகின்றார்! பக்கந் தோறும்
பால்நிலாவின் வெளிச்சம்தான் புஷ்பா வாழ்க!

தீப்பட்ட காயத்தைத் தொட்டுத் தொட்டு
தினம்பார்த்து வாடுதல் போல் தமிழி னத்தார்
நாள்பட்ட துயரத்தை எண்ணி யெண்ணி
நனைகின்றார் கண்ணீரில்! சங்க கால
வேல்பட்ட போர்க்களத்தில் வென்ற நாமோ
விடியலுக்கே ஏங்குகின்றோம் என்ன செய்ய?
கால்பட்ட இடமெல்லாம் வென்றோம்! இன்று
கனல்பரப்பில் வேய்கின்றான் என்கின் றாரே!

ஊர்செழிக்கக் கரிகாலன் அணையைத் தந்தான்!
உலாவந்து கடாரத்தை சோழன் வென்றான்!
ஏர்செழிக்கப் பெய்கின்ற கார்மே கம்போல்
இருகையால் கொடைபெய்தான் பாரி! வாளின்
கூர்செழிக்கும் பாவேந்தன் பாடல் கண்டு
குனியாத கோபுரமாய் நிமிர்ந்து நின்றோம்!
தேர்செழித்த அழகைப்போல் புஷ்பா பாடல்
தேன்தமிழின் கருவூலம்! வளர்க! வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

செந்தமிழ்த் தேனீ இரா. மதிவாணன்
உரிமையாளர், உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை.

'சங்கே முழங்கு!' எனப் பாடிய பாவேந்தர் இன்று இருந்திருந்தால் 'எங்கள் தமிழ் முழக்கம், இது எந்தமிழர் வழக்கம்' என்று பாடியிருப்பார்.

'நலம் செழிப்புக்குத் தமிழ்தான்' என்ற உணர்வினைக் குருதிநாளமெல்லாம் தூக்கிச் சுமப்பவர்கள் ஈழத் தமிழர்கள்.

அந்த ஈழமண்ணைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள சகோதரி புஷ்பா கிரிஸ்ரி படைத்த 'அன்பின் அலைகள்' பார்க்குமிடமெல்லாம் உயர்ந்து, எழும்பி, ஓங்கியோங்கித் தமிழ் ஓசையை எழுப்புகிறது! இனத்தை, மொழியை, பண்பாட்டை, சமுதாயத்தைத் தூக்கிச் சுமக்கும் இந்த அலைகள் தமிழர்களின் கலைகளையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

'உணர்வுகள்' தலைப்பில் தொடங்கி 'ஏசையா' வரையுள்ள அத்தனை தலைப்புகளும் உணர்ச்சிபூர்வமான தலைப்புகள்.

'கோடை மாறட்டும்!', 'காகிதத் தாய்', 'யாரைத் தேடி ஓடுகிறது நதி?' முதலான புதுமைத் தலைப்புகள் அவருடைய சிந்தனையில் பூத்தது எப்படியோ தெரியவில்லை.

*'வேதனையில் வெந்து தணிகிறது*
*வெறுமையாய் வறுமையாய்க்*
*கிடக்கும் என் சின்ன மனது!'*

என்னும் அவருடைய வரிகள் கண்களில் கண்ணீரை வரவழைத்துக் கால்வரை நனைக்கின்றது.

*'நினைவுகளின் காலம்*
*உறவுகளின் கோலம்'*

சமுதாயச் சிந்தனைகளின் நல்ல படப்பிடிப்பு!

'கருவறை முதல் கல்லறை' வரை என்பார்கள். புஷ்பா கிறிஸ்ரி "தாயின் கருவறையில் தொடங்கி, ஞாலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையைக் கண்டு, காலக் கருவறை கற்று, வாயின் கருவறையில் பேசுகின்றோம்'' என்கின்றாரே, அவர் கண்டது கருவறையா? கருவூல அறையா?

*'இறந்த காலம் முடிக்கொண்ட கதவு*
*திறந்து பார்க்கச் சாவி இல்லையே!'*

அப்பப்பா! எதார்த்தத்தை எப்படி பந்தி பரிமாறுகிறார் பாருங்கள்!

*'இளமை வேண்டாம் என்று*
*முதுமையைக் கடவுளிடம் கேட்டான்!*
*முதுமையில் இளமை கேட்டு*
*அழுது மரிக்கின்றான்!'*

மனித மனவோட்டத்தை மணக்கும் தமிழால் வடித்திருக் கிறார் புஷ்பா!

*'நீ உழவனா?*
*மனிதனைக் கேட்டது நதி!'*

வளமான கவிதை! வண்ணத் தமிழ்க் கவிதை!

இத்தனையும் பாடிய புஷ்பா *'இற்றுப் போகாத நெஞ் சோடு பாவத் தமிழனுக்கு ஞாலத்தில் விடிவு இல்லையா?'* என ஏங்குகிறார். *'என் தாய்த் தமிழுக்கு இத்தனை கொடுமையா?'* எனக் கொதிக்கிறார்.

புலம்பெயர் தமிழர்களின் நூல்களை வெளியிட்டுப் பெருமைகளை அணிகலன்களாக அணிந்திருக்கும் உலகத் தமிழர் பதிப்பகம், காலப் பெட்டகமாய்த் திகழும் இந்தக் காவியப் பட்டயத்தை வெளியிடுவதிலும் பெருமைப்படுகிறது.

இன உணர்வையும் மொழி உணர்வையும் இதயத்தில் அணிந்து மகிழும் புஷ்பா அவர்கள் இன்னும் பல நூல்களைப் படைத்தளிக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்நூல் பிழையின்றி வெளிவர, பிழைதிருத்தப் பணிகளை மேற்கொண்டுதவிய புலவர் வெற்றியழகன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி! இந்நூல் உருவாக்கத்தில் உடனிருந்து ஒத்துழைப்பு நல்கிய அச்சுக்கலை நண்பர்களுக்கு நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கருவாக்கி உயிர்கொடுத்துப் பெயர் தந்த தந்தைக்கும், கருவறையில் சுமந்த என் அன்னைக்கும், என்னை உருவாக்கிய என் ஆசிரியர்கட்கும், வாய்க்கால் கரையோரம், வயல்வெளிகள் என்று காலார நான் நடந்த என் கிராமத்து மண்ணுக்கும், தங்கத் தமிழ்மொழியாம் என் தாய்மொழிக்கும், தலைவணங்கி இந்த என் படைப்புகளைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

கால நீரோட்டத்தில் ஒரு படகாகக் கரை ஒதுங்கும் நான், நீர்க்குமிழி போன்ற இந்த வாழ்க்கையில் நான் பார்த்துப் பேசிப் பழகிய, கேட்டு உணர்ந்த சம்பவங்கள், வாழ்க்கையின் அனுபவங்களைப் பாடமாகப் படித்து, அதை மனத்தில் பதித்து, கழிந்து போன நாள்களின் எச்சங்களைச் சேகரித்து, வானி லிருந்து சிதறிய சின்ன மழைத்துளிகள் ஓர் ஏழை விவசாயிக்கு உதவுவது போன்று என் எண்ணங்களும் எனைத் தூண்டிட அவற்றைச் சேர்த்து வைத்துக் கவியாக்கி அதனை இங்கு ஒரு புத்தகமாக்கிப் பிரசுரிக்கின்றேன். வாய்க்கால் மண்ணள்ளி விளையாடிய என் கைகளில் இன்று பனித் துகள்கள் குளிர் தரு கின்றன.

என் தாய் மண்ணை விட்டு 1982இல் நான் வெளியேறி விட்டாலும் இன்றும் என் கனவில் வந்து போகும் என் இளங்காலத்து-கிராமத்து நினைவுகள், பனைமரத்துக் கிளிகளின் கத்தல்கள், தென்னைமரத்துக் குயில்களின் பாடல்கள், அலையலையாய் அசைந்தாடும் வயல்வெளிகள், வாயூறும் நாவற் பழங்கள், மாம்பழங்கள், பனம்பழங்கள் என்று நினைவை நிறைக்கும் அந்த ஞாபகங்கள் இன்றும் கனவில் வந்து இடை நடு ராத்திரியில் என்னை அழவைத்து வேடிக்கை பார்க்கின்றன. என்றோ ஒரு நாள் விடியல் வரும் என்னும் நம்பிக்கையுடன் காலம் ஓடுகிறது.

காடுவெட்டித் துப்பரவு செய்து கழனியாக்கி விவசாயம் செய்த நிலங்களெல்லாம் பறிபோனதை, இப்போதும், நினைவு போகும் நிலையிலும், எண்ணி எண்ணி அழுத என் தாய் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளுடன் தன் உயிரை மாய்த்ததைக் கண்டு நானும் அழுது வடிக்கிறேன்.

அன்பு என்னும் ஒரு சொல்லுக்கு எத்தனை அர்த்தங்கள். பாசம், கருணை, காதல், அன்பு, நேசம். சிநேகம், கரிசனை, கனிவு இப்படி எத்தனை அர்த்தங்கள். இவை அத்தனையையும் இங்கு நான் காண விழைகின்றேன். படித்துச் சுவைத்துப் பாருங்களேன்.

மொத்தத்தில் கன்னி முயற்சியான எனது இந்த வெளி யீட்டைப் படித்து மகிழுங்கள். உங்கள் ஆசீர்வாதங்கள் என்னை வாழ்த்தும் என்று நம்பிக்கையுடன் உங்கள் கைகளில் என் நூலைத் தவழ விடுகின்றேன்.

(புஷ்பா கிறிஸ்ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உணர்வுகள் | 21 |
| 2. | என் தாயென்னும் கோவில் | 22 |
| 3. | மறுமுறையும் தந்தையாய்ப் பிறந்திடுக! | 24 |
| 4. | அந்த வீடு | 26 |
| 5. | மன்னித்துவிடு தாயே! | 27 |
| 6. | அம்மா தூங்க மறுக்கிறார்! | 28 |
| 7. | அப்பா அப்பா எழுந்திருங்கள்! | 30 |
| 8. | அம்மா ஏங்குகிறாள்! | 33 |
| 9. | கேள்விக்குறி | 34 |
| 10. | கருவறைகள் | 36 |
| 11. | பகல் முழுவதும் | 37 |
| 12. | நேரம் | 38 |
| 13. | மயானத்து மரங்கள் | 39 |
| 14. | பதிவு செய்கிறேன் | 40 |
| 15. | கொடியது வறுமை | 42 |
| 16. | கடவுள் கனவில்.. | 44 |
| 17. | என்னை எழுப்பிவிடு அம்மா! | 46 |
| 18. | மீண்டும் ஒரு முறை | 47 |
| 19. | சொல்லிவிடுங்கள் நீங்கள் | 48 |
| 20. | வருமானத் துண்டு | 49 |
| 21. | மரணம் என்பது | 50 |
| 22. | மகளிர் தினம் | 52 |
| 23. | நேரத்திற்கேற்ப உலகம் | 54 |
| 24. | பாடங்கள் | 56 |
| 25. | புதிய ஆண்டு பிறந்துள்ளது | 58 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. | வேடிக்கை மனிதர்கள் | 59 |
| 27. | பனியின் அழகு | 62 |
| 28. | காலம் | 63 |
| 29. | ஆசிரியர் | 64 |
| 30. | இரத்த தானம் | 65 |
| 31. | யாரைத் தேடி ஓடுகிறது நதி? | 66 |
| 32. | ஒரு தாயின் அழுகை | 68 |
| 33. | மரணப்படுக்கையில் இருந்து ஒரு கடிதம் | 71 |
| 34. | குப்பைகள் | 74 |
| 35. | முதியோர் கல்வி | 75 |
| 36. | காகிதத் தாய் | 76 |
| 37. | கோடை மாறட்டும்! | 77 |
| 38. | புகைத்தலைப் பகைப்போம்! | 78 |
| 39. | குருவி பிறந்த நல்ல கூடு | 80 |
| 40. | வண்ணங்கள் நூறானாலும் எண்ணங்கள் மாறாது | 81 |
| 41. | வன விலங்கை வாழ வைப்போம்! | 82 |
| 42. | தந்தைசொல் மிக்க மந்திரமில்லை! | 83 |
| 43. | பாசம் | 84 |
| 44. | எங்கே என் தாய்த் தமிழ்? | 86 |
| 45. | எங்கே மறப்பது என் ஆச்சியை? | 88 |
| 46. | எலிக்கும் எலிக்கும் கல்யாணம் | 90 |
| 47. | குடைவான் கூப்பிடு தூரம் | 92 |
| 48. | தேடித் தேடி | 93 |
| 49. | அன்னைக்கு நிகரிங்கே யார்? | 94 |
| 50. | சிலுவையில் தொங்கும் தியாகம்! | 95 |
| 51. | யேசையா | 96 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

என்னைப் படைத்து மனுஷியாக்கி எனக்குள் கருணை மனம் தந்த கடவுளுக்கும்

எனக்குத் தமிழ் கற்றுத் தந்த என் ஆசிரியர்கட்கும்,

என்னை எழுதத் தூண்டிய என் பெற்றோர்க்கும்,

எனக்கு உறுதுணையாக இருந்த என் கணவருக்கும், என் குழந்தைகட்கும், என் இலக்கியப் படைப்பின் கன்னி முயற்சிக்கு 'ஆர்வ அலைகள்' என்னும் அணிந்துரை வழங்கி ஊக்குவித்த முன்னாள் துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்களுக்கும், எனது புத்தகத்திற்கு முகவுரை எழுதித் தந்த திரு இலந்தை இராமசாமி ஐயா அவர்கட்கும்

கவிவரிகள் மூலம் வாழ்த்துரை பாடியுள்ள கவிஞர் கந்தவனம் அவர்கட்கும்

அணிந்துரை எழுதிய கலாநிதி இ. பாலசுந்தரம் அவர் கட்கும்

வாழ்த்துக் கவிதை வழங்கிய இன எழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் அவர்கட்கும்

இந்தப் புத்தகத்தை அழகுற அச்சேற்றித் தந்த உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளர் திரு. மதிவாணன் அவர்கட்கும்

வாழ்த்துக் கவிதை வழங்கியதோடு இந்நூல் பிழையின்றி வெளிவர, மெய்ப்புப் பணிகளையும் மேற் கொண்ட புலவர் வெற்றியழகன் அவர்கட்கும்

மேலும் இந்நூல் வெளிவர, எனக்குப் பல உதவிகள் செய்த அனைவர்க்கும் **என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**என் படைப்புகளை அவ்வப்போது**
**வெளியிட்டு என்னை ஊக்கப்படுத்திய**

| | |
|---|---|
| திண்ணை இணையம் | நிலாச்சாரல் இணையம் |
| தமிழோவியம் இணையம் | தினம் ஒரு கவிதை இணையம் |
| பதிவுகள் இணையம் | வார்ப்பு இணையம் |
| செந்தாமரை கனேடியப் பத்திரிகை | உதயன் கனேடியப் பத்திரிகை |
| கீதவாணி வானொலி | கனேடியத் தமிழ் வானொலி |

**ஆகிய ஊடகங்களுக்கு நன்றி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்

கலப்பையில் வைத்த கை
அகப்பையில் உணவு தர
உலக்கையில் இடித்த இடி
இடக்கையில் உளைவு தர
விடலையின் வாழ்வு நிலை
மனத்தினில் கவலை தர

உழைத்த பெற்றோர் மனம்
உவகையில் மகிழ்வு கொள்ள
அருமையாம் உழைப்பினை
வெறுமையாய் மண்ணில் போட்டு
உரிமையுடன் தம் மகனை
அனுப்பி வைத்தார் பள்ளிக்கு!

மண்ணை விட்டுப் போனாலும்
மண்ணின் நினைவுகள் அவன்
நெஞ்சை விட்டுப் போகவில்லை!
பள்ளிப் படிப்பும் முடித்துப்
பல்கலைக் கழகமும் முடித்துத்
தேய்ந்து போயின பென்சில்கள்,
பேனாக்கள், காகிதங்கள்!

பெற்றோரின் வேண்டுதலில்
புகுந்து விட்டான் வங்கியொன்றின்
புத்தம் புது அதிகாரியாய்!
வாழ்க்கை கசந்தது பட்டணத்தில்!
தன் மண்ணை எண்ணியதும்
மனம் கனத்தது; களைத்தது!

பெற்றோர் உழைத்த வியர்வை
மண்ணில் பசலையாய்த் தெரிந்தது!
மீண்டு வந்தான் தாய் நிழல் தேடி.
கண்டு கொண்டான் காதல் கொண்டான்!
கடுமை உழைப்பைக் கலைவாழ்வாக்கினான்!
வாழத் தொடங்கி விட்டான்
தானும் ஓர் கூலியாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாயென்னும் கோயில்

அன்புத் தாயே என் ஆருயிர் அம்மா!
இன்று உம் மகள் நான் உங்கள் உயிரே!

மூன்று வயதில் ஆஸ்துமா வந்தபோது
அன்றே எனைப் பிலிப்பு வைத்தியரிடம்
சலிப்பின்றிக் கொண்டு சென்று காத்தவளே!
மகிப்புடன் எனக்கொரு வாழ்வு தந்தவளே!

மகன் பஸ்ரன் பிறந்தபோது மாதா நீங்கள்
மகப்பேறு பார்க்க என் அருகில் நின்றீர்கள்!
அட்டணைக் காலுடன் பிறந்தான்
என் மகனென்றீர்கள்!
அருமை மகன் குழந்தைக்
காப்பிலிருந்து(nursery)
அப்பையா தான் பிறந்தான் என்று
அழைத்தாயே!

பதினோராம் நாள் ஆப்பரேசன் என்று
பறந்து போனீர்கள் வைத்தியசாலை!
நான் தனித்தேன்!
என்னைக் காத்து என் மகனைக் காத்தேன்!

ஏழுவயதில் என் தாய் கீழே விழத்
தாங்கிப் பிடித்த என் மகன் தேனீர் போட
அது அவன் வயிற்றில் கொட்டிய போது
தேள் கொட்டிய ஆளாகித் துடித்தீர்களே!

மகள் செசில் பிறப்பதற்கு வைத்தியசாலை வந்து
மகள் எனக்கு உதவியாகக் காத்தீர்களே தாயே!
வயிற்றில் குறுக்கே கிடந்த மகளை
வெட்டி எடுத்திட
வயிற்று மகள் எனக்குக்
கையொப்பமிட்டீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே உங்களைக் காத்திட
என் கணவன் கிறிஸ்ரிக்கும்
தானாக வந்தமைந்தது நேரம் காலம்!
பாசம் காட்டி நேசமுடன்
காலையுணவும் பகலுணவும் தந்திட
எமக்கு வரம் தந்திட்டான் இறைவன்!

கருணை காட்டிப் பிறருக்கு
நீங்கள் தந்த பாசமும் நேசமும்
உங்களுக்குத் திரும்பி ஆசையாய் அன்பாய்த்
தாதிமார்களாய் வைத்தியராய் மக்களாய்
எத்தனை அன்புகள்!

அத்தனையும் உங்களை அரவணைத்தன அம்மா!
நித்திய உலகம் போன எங்களின் தாயே!
நித்தமும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது!
மனதார உங்களைக் காத்திடும் வரம் தந்தீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமுறையும் தந்தையாய்ப் பிறந்திடுக!

வித்திட்டாய் நீ இம்மண்ணில்
நான் ஒரு மரமாய் வளர்ந்திருந்தேன்!
மரமென்று பிறர் எனைத் திட்டாமல்
அன்பு தந்தாய்-நீ
எனக்கு அன்பு தந்தாய்!
உயிரும் தந்தாய்!
உறவும் தந்தாய்!
உணர்வும் தந்தாய்!
உறக்கமின்றி உழைத்துத் தந்தாய்!
படுக்கையின்றிப் பாடம் தந்தாய்!

அறிவு தந்தாய்! கல்வி
நெறியும் கற்றுத் தந்தாய்!
பாசம் தந்தாய்!
பரிவு தந்தாய்!
கருணை தந்தாய்!
காவல் செய்தாய்!
கண்ணிமையாய்க் காத்தாய்!
கடவுளாய் பாதுகாத்தாய்!

எந்தையே! என்னை
சிந்தையிலே தினமிருத்தி
விந்தையால் எனை வளர்த்தாய்!
இரவு வேலை முடித்து
உறக்கமென்று வந்தாலும்
உறங்காமல் எமக்காகச்
சமைத்து வைத்துக்
சாந்தமாய்க் காத்திருந்து
சோறு போட்டுத் தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறு உண்ணும் அழகை ரசித்தாய்!
தேவையென்று நான் கேட்கும்
வேளைகளெல்லாம் நீ அங்கிருந்தாய்!
நோயால் நீ படுத்த வேளை கூட
நோயை எமக்கு மறைத்து
உனக்குள் சாஸ்வதமாக்கி
எமக்கு சாமாதானம் தந்தாய்!

உயிரான உயிரே! என்னை விட்டு
உலகை விட்டு என் உலகமே
எங்கே போனாய்?
தவிக்கின்றேன்!
மீண்டும் நீ வேண்டும்!
மறுமுறையும் எனக்கு தந்தையாய்த்
தந்திடு உன்னை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த வீடு

மனம் வியாகுலமாய் அழுது வடிந்தது
காலாரக் கொஞ்சம் நடந்து போக
அந்தப் பெரிய வீடு வந்தது!

கடி நாயும் தெரியவில்லை
வாசலில் பலகை இல்லை!
நாய்கள் ஜாக்கிரதை என்று
காவல் காரனும் இல்லை!

மஞ்சள், சிவப்பு என்று
பல வர்ணக் கலவையில்
குரோட்டன் செடிகள் பல
வீட்டைச் சுற்றி நின்று
அழகு காட்ட சுவர் மட்டும்
அழுக்காகிக் கிடந்தன அந்த
உள் வீட்டு மனிதர் மனத்தைப் போல்!

இரவு மட்டுமே பல்துலக்கிக்
காலைத் தேனீர் குடித்து
வாரம் ஒருமுறை குளித்து
மற்றைய நாள்கள் எல்லாம்
வாசனைத் தைலம் பூசி
அழகாய் உடுத்திக் கொண்டு
குளிருக்குப் பயந்து தினம்
குளிக்க மறுத்து வாழ்ந்த
வெள்ளைக் காரப் பயலாக
உயர்ந்து நின்றது அந்த வீடு!

வெளியே அழகிருந்தாலும்
உள்ளே அழுக்கைக் காட்டக்
கண்ணாடியாக இல்லையே
அந்தச் சுவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னித்துவிடு தாயே!

இறந்தவள் உன் மகள்தான்!
உன்னிடம் சொல்லிக்கொள்ள
என்னிடம் தைரியம் இல்லை!
வயதான உன் உள்மனம்
தாங்கிக்கொள்ளும் சக்தியை
என்றோ இழந்து விட்டதால்
உன் உருவம் மாறியது போல்
உன் இதயத்து நினைவுகள்,
உன் கனவுகள், கற்பனைகள்,
இலட்சியங்கள் யாவுமே மாறி
நீ நிம்மதியற்ற உறக்கத்தில்
கிடந்து உழலும்போது,
என்றோ இறந்துபோன
உன் சோதரன் இன்றுதான்
இறந்தான் என்று புலம்புகிறாய்!

இன்று இறந்து மடிந்த
உன் மகளின் மரணமும்
உன்னை உருக்குலைப்பதை
நான் அனுமதிக்க விரும்பவில்லை!
மரணம் வரும்வரை காத்திரு!
மயானத்தை நினைத்து நீ
தினம் தினம் வடிக்கும்
கண்ணீர்த் துளிகள் போதும்!

மன்னித்து விடு என்னை.
உன் மகளின் மரணத்தை
உன்னிடமிருந்து நான்
மறைத்துவிட்டேன்!
நீ மரணிக்கும்போது
உன்னை வரவேற்க
விண்ணகத்தில் அவள்
உனக்காகக் காத்திருப்பாள்
அது நிச்சயமாய் உறுதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா தூங்க மறுக்கிறார்

அம்மா தூங்க முயல்கிறார்.
கண்கள் தூங்க மறுக்கின்றன!
இன்னும் பொழுது விடியவில்லை
தூரத்துக் காரொன்று உறுமுகின்றது
இரவு வேலை முடித்த
அதிகாலை உழைப்பாளி போலும்!

அம்மா திரும்பிப் படுக்கிறார்
பகல் முழுவதும் அலைந்து
வீட்டினுள்ளே நடந்த அலைச்சல்
உடல் முழுவதும் தெரிகிறது!

இன்னும் கண்களில் தூக்கக் கலக்கம்
மூடமறுக்கும் இமைகள்!
பொழுது புலர்ந்ததைச் சூரியன்
கிழக்கிலே உணர்த்துகிறது!

இனியும் தூங்குவதில் அர்த்தமில்லை!
வந்து கதவு தட்டும்
தன் பேரக் குழந்தைகளை
ஏற்றுக் கொண்டு
தொழிலுக்குப் போகும்
தன் மக்களை வழியனுப்பி
வைக்க வேண்டும்!

விடியா மூஞ்சியாய்ப் படுக்கையில்
கிடப்பதில் யாருக்கு என்ன லாபம்?
நிரந்தர நோயுடன்
படுக்கையில் கிடக்கும் கணவனுக்குத்
தேனீர் தர யார் வருவார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கக் கலக்கத்தில் கிடக்கும்
மறு பிள்ளைகளைத்
தொலைபேசியில் அழைத்து
யார் எழுப்புவார்கள்?
இந்தக் கட்டை உயிருடன்
இருக்கும் வரை
என் கடன் பணி செய்வதே!

கடமையைச் செய்தால்
பலன் தேடி வருமென்ற
முனகலுடன் மிகுந்த சிரமத்துடன்
கண்விழித்து எழுந்து தன்
கடமையைத் தொடர்கிறார்
75வயது என் அம்மா!

இனி இரவுத் தூக்கமா?
இல்லை மறுநாள் இரவு...
அதுவும் ஏமாற்றினால்,
நித்தியத் தூக்கம் தானே!
நிரந்தரமாய்த் தூங்கும்
எதிர்பார்ப்புடன்
தூக்கம் கலைகிறார் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா அப்பா எழுந்திருங்கள்

அப்பா அப்பா
எழுந்திருங்கள்!
கண்ணைத் திறந்து
ஒருமுறை பாருங்கள்!

தூங்க மாட்டீர்களே!
இது நிரந்தரத் தூக்கமா?

ஐயோ..ஐயோ..
வேண்டாம் வேண்டாம்!
தூங்க வேண்டாம் அப்பா!

பழி பாவம் தாங்கமாட்டான்
நாளை பிறக்கப் போகும்
என் வயிற்றிலிருக்கும் மகன்!

பேரனைத் தின்றவன் என்று
ஊர் சொல்ல வேண்டாம்
என் மகனை!

எழுந்திருங்கள் ஒரு முறை!
எனக்கு நோயென்று
என்னை எழுப்பாமல்
உங்கள் நோயோடு போராடி
எனக்கு உணவு தந்தீர்களே!

பொழுது விடிந்து விட்டது!
பொறுத்திருந்து பார்த்து விட்டேன்!
இனியும் முடியாது என்னால்
எழுந்திருங்கள்!
எனக்குச் சக்தியில்லை..
உங்கள் மரணத்தைத் தாங்க!

நாளை பெறவிருக்கும்
என் மகனைப் பிரசவிக்க
வேண்டும் எனக்குப்
பிரத்தியேக சக்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திருங்கள்...
போதும் விளையாடியது!
அப்பா.. அப்பா..
அப்.பா..அ.ப்..பா!

கூடாத நேரத்தில் ஏன்
இப்படிப் போய் விட்டீர்கள்?
என்னால் முடியவில்லை..
அப்பா..அப்பா!

எனக்காகத் தந்த அன்பு எங்கே?.
இனி உலகம் என்னைக்
கேலி செய்யப் போகிறது!

கூடப் பிறந்தவளும்
குழி பறித்துப் போகின்றாள்!
''உனக்காகவே வாழ்ந்தார்.
உன்னோடு இருந்தார்..
உன் மகன் பிறப்போடு போனார்''

வலிக்கிறது அப்பா அந்த
அக்காவின் வார்த்தைகள்!
கொஞ்ச காலம்
இன்னும் கொஞ்ச காலம்
வாழ்ந்திருக்கலாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மகனிடம் கொஞ்சம்
கொஞ்சிப் பேசி விளையாடி
மகிழ்ந்து போய் நீங்கள்
போயிருந்தால் நானும்
மகிழ்ச்சியால் மலர்ந்திருப்பேன்!

மரணித்துக் கிடக்கும்
உங்களை வந்து பார்க்க
முடியாமல்
இதே வைத்திய சாலையில்
நான் பிரசவ வலியில் துடித்துக்கிடக்க
என்னைத் தவிக்க விட்டுத்
தனி வழி போனதன்
மாயமென்ன அப்பா?

வேதனையில் வெந்து தணிகிறது
வெறுமையாய், வறுமையாய்க்
கிடக்கும் என் சின்ன மனது!

இன்னுங் கொஞ்ச காலம்
வாழ்ந்திருக்கலாமே அப்பா.
அ.ப்..பா! அ.ப்..பா! அ.ப்..பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா ஏங்குகிறாள்!

வீட்டைப் பார்த்து நோட்டம் பார்த்து
ஆட்டம் காட்டிப் பாட்டும் பாடிக்
கூட்டம் கூடி ஆர்ப்பரித்தாலும்-அன்பின்
ஏக்கமாய் அவள் நெஞ்சிலே தேடல்!

மாண்டு ஈராண்டு முடியாத போதும்
காணேன் என்று தேடி அலைந்து
மார்பிலே நிலைத்த உயிராம் கணவனைப்
பாரதனில் தேடி வாடும் என்தாய்!

அறிவு குறைந்து நினைவு மறந்து
திறமை மறைந்து கனவும் இழந்து
துணைவன் நினைவில் தனிமைத் துயரில்
அன்னை இவளின் தவிப்பின் ஏக்கம்!

பிள்ளை என்னைத் துரத்தும் சோகம்
உள்ளம் உணர்த்தும் அன்னைப் பாசம்!
இல்லை உலகில் இப்படித் துன்பம்
தொல்லை தந்திடும் சோகங்களே!

நினைவுகளின் காலம்
உறவுகளின் கோலம்
தனிமையின் வாட்டம்
நிஜங்களின் தேக்கம்
கண்ணீரில் நாட்டம்
பெண்ணிவள் தேட்டம்
மண்ணின்றி மறைவதற்கு
எண்ணில்லா வேண்டல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக் குறி

மனத்தில் தெரிந்த நல்லவர்கள்
மண்ணில் பிறந்த வல்லவர்களென்று
எண்ணி யெண்ணிப் பார்த்து
எடுத்து விட்டேன் ஒரு மன்மதனை!
என் அருமைத் தங்கைக்கு
வாழ்க்கைத் துணைவனாக!
என் வீட்டு மருமகனாக!

நல்லவன்தான் மனிதன்
வல்லவன்தான் மனித
நேயம் உள்ளவன் தானென்று
இறுமாப்புக் கொண்டபோது
எடுத்தெறிந்து பேசிவிட்டான்!
பொடிப்பயலென்று என்னால்
கடிந்து பேசமுடியவில்லை
காலத்தின் கொடிய யுத்தம்
ஞாலத்தின் நடத்தும் பாடம்!

சீதனக் கொடுமையிது
சீண்டிடும் பெண்குலத்தைக்
கொண்டிட்ட மனையாளின்
கோடிப்பணம் இல்லையென்று
வீட்டை விட்டே வெளியேற்றி
வீதியில் அலைக்கழித்துப்
போலீசு கோடு என்று
போதாதவையும் செய்து
ஒருவாறு சேர்த்துவைத்தால்
ஒருவருடம் பேச்சில்லையென்றானாம்!

என்ன சொல்ல? எதைச் சொல்ல?
நலமில்லா நம்மினத்தில்
வளமில்லா வாழ்க்கை நிலைமை!

கேள்விக் குறிகளாய்
எம் மனத்தில்..எம் மத்தியில்...
இதயத்து ஓலமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் என்ன பாக்கி இருக்கிறது?
கேட்டுத் தான் பார்க்கிறேன்
காலனிடம்!

எனக்கு வரவேண்டிய
துன்பங்கள் யாவும்
வந்து போனபின்னும்
நான் ஏன் இன்னும்
உயிர் வாழவேண்டுனென்று
கேட்டுத் தான் பார்க்கிறேன்!

காலமிருக்கிறது இன்னும்
வாழ்ந்து பாரென்று!
சொல்லிச் செல்லும் காலனிடம்
இன்னும் என்ன பாக்கி!

துன்பத்தைப் பங்கிட்டுத்
துயரத்தைத் துகிலுரித்து
இன்பத்தை இடைமறித்து
இதயத்தைக் கிழித்துவிட்ட
காலத்தின் கோலத்தை
மாற்றுவார் யாருளரோ?

கேள்விகளால் வேள்வி செய்து
காலம் கடத்தும் ஓர்
ஆன்மாவின் இதயக் கோலமா?
இல்லை இல்லை இது
என்றன் இதயத்து ஓலமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவறைகள்

எத்தனை கருவறைகள் இவ்வுலகில்
அத்தனை திருவறைகள் இம்மண்ணில்!
சுமந்த எம் உருவங்கள் உம் மடியில்
இழந்த எம் உருவகங்கள் எம் உலகில்!

தாயின் கருவறையில் நாம் கருவமர்ந்தோம்
ஞாலக் கருவறையில் நாம் பிறந்து வந்தோம்!
காலக் கருவறைக்குள் நாம் கற்க வந்தோம்
வாயின் கருவறையில் நாம் பேசவந்தோம்!

கல்வி கற்க நாம் கல்லூரிக் கருவறைக்குள்
துள்ளிச் சென்றுதான் கற்று வந்தோம்!
தனியே கற்ற கல்விதனை இதயத்துக்
கனியாக்கிச் சுவைத்து மகிழ்கின்றோம்!

உலகிலே நாம் தேடுவது நம்மியல்பு
நிலையாக நாளும் நாடுவது நல்லறிவு!
நாமும் நாளெல்லாம் ஓடுவது காசுக்காக
நாளும் நாமிங்கே பாடுவதும் உள்ளத்திற்காக!

இத்தனையும் நாம் இன்று செய்வது
இவ்வுலகக் கருவறையின் இதயத்தில்!
நிலவறையும் நிச்சயமாய்க் காத்திருந்து
நிஜமாக எமை ஏற்றிடும் கல்லறையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகல் முழுவதும்

பாத யாத்திரை போய் வந்தேன்!
வாகனங்கள் குறைந்து
அமைதியாகக் கிடக்கும் சாலை!

சரித்திரமாகி விட்ட அந்தப்
பணக்கார வீட்டுப் பிறந்த நாள் விழா!

சம்பவமாகித் தெரிகிறது அந்த
ஏழை வீட்டுக் குழந்தையின் நோய்!

அரங்கேற்றம் முடித்து வந்த
நர்த்தனத் தாரகையின் அழகு!

புது வீடு வாங்கிக் குடித்தனம்
வந்த புது மணத் தம்பதிகள்!

பக்கத்து வீட்டில் புதிதாய்
முளைத்திருக்கும் இளம் வக்கீல்!

நாளை கார் ஓட்டப் பந்தயத்தில்
கலந்து ஓடவிருக்கும் வீரன்!

இன்னும் எத்தனையோ...
இவை பற்றிக் கவலைப்படாத
என் கண்கள் பனித்தன!

பலகணியின் பெட்டி மறைவில்
இருந்த அந்த மாடப் புறாவின்
முட்டை உடைந்தது கண்டு!

என் கண்கள் பனித்தன!
இது யார் செய்த பாவமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்

இன்று வந்தது
போய்க்கொண்டிருக்கிறது!

நாளை வரும்
நாமிருப்போமா என்ற
நம்பிக்கை எனக்கில்லை!

நேற்று என்பது வரவே வராது
நடந்து முடிந்துவிட்ட
பனிக்காலம் போன்றது!

இறந்த காலம் என்பது
மூடிக்கொண்ட கதவு
திறந்து பார்க்கச் சாவியில்லை
சேர்த்து வைக்க வழியுமில்லை!

நேரம் ஓடிக்கொண்டிருக்க அதைத்
துரத்திப் பிடிக்க நாமும் தினம்
ஓடிக்கொண்டிருக்கிறோம்!

எங்கே போய்விடும் நேரம்?

நாம் இவ்வுலகை விட்டுப்
பிரிந்து போகும் முன்னர்
நேரத்தைத் துரத்திப் பிடிக்கலாம்!
நேரத்தின் பின்னால்
ஓடிப்போவோம் வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயானத்து மரங்கள்

எத்தனை விதமான மரங்கள்?
அமைதியாகக் காத்து நிற்கின்றன!
இன்னும் எவர் வருவார் போவார்
என்ற எதிர்பார்ப்புகளுடன்!

எத்தனை உடல்கள்
அந்த மரங்களின் நிழலில்
நித்தியமாய் நித்திரை கொள்ள
வந்து கொண்டிருக்கின்றன?

ஆண்டாண்டுக் காலமாக
வம்சப் பெயர் கூறிடும்
எத்தனை பெயர்ப்பலகைகள்
அந்த மரநிழல்களில்!

மயானத்து மௌனத்தையும்
மனிதர்களின் மௌனத்தையும்
ஒன்றாக்கி வைத்துத் தான்
அந்த இலைகள் நர்த்தனம் புரிகின்றனவோ?

மூன்றே மாதங்களில் சலசலத்துவிட்டு
மௌனப் பாசை பேசி
மனிதரின் இறுதிப் பயணப்
பாசை பேசிடும் மரங்களே!

எத்தனை காலம் போனாலும்
எத்தனை மனிதர்கள் வந்தாலும்
அத்தனை மனிதர்களும் உம்மிடம்
எத்தனை சொந்தமாய்ப் போவார்களோ!

வண்ணக் கலவையால் வசந்தம் பேசிக்
கண்ணைக் கவர்ந்து காவியம் பாடிவிட்டு
எண்ணி மூன்றே மாதங்களில்
விண்ணைப் பார்க்கும் அலக்குகள்!

சலனமற்ற மனித வாழ்வுகள்
சங்கமித்த மயானமான இடத்தில்
சரித்திரம் படைத்திடும்
சாகா மனிதராய், மரங்களே
நீங்கள் மாளாத மரங்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்கிறேன்!

என் நினைவலைகளில்...
பதிவு செய்கிறேன்!

முதலில் எனக்கு அரிச்சுவடி
சொல்லித் தந்த அந்த
ஆசிரியர் பெயர் என்ன?
எனக்கு நினைவிலில்லை!

சடுதியாய்ச் செத்துப் போன என் ஆச்சி
எனக்கென விட்டுப் போன
சொந்தம் என் அப்பையா!

அவரும் என்னை விட்டுப் போனபோது
அவர் சொல்லித் தந்த அறிவுரைகள்
மறந்து மரத்துப் போயின!

நான் தனித்து நின்றது
எனக்கு நினைவிருக்கிறது!

கோயில் முடிந்து வீட்டுக்கு
வரும் வழியில் வெகு
கொடுமையாகப் பெய்த பேய் மழை!
காற்றோடு என்னை அள்ளி
அருகிருந்த வாய்க்காலில்
தள்ளிவிட்டு வேடிக்கை காட்டியது!

இயற்கையும் என் உடலும்
இனிமையாய்ச் செய்த கொடுமையால்
நான் ருதுவான போது
என்னை வாழ்த்திய பக்கத்து வீட்டு
என் சிங்கள உறவினர் குடும்பம்
எனக்கு நினைலிவில்லை!

உயர்தரப் பரீட்சையில்
கேட்கப்பட்ட கேள்விகட்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகப் பதில் எழுதிய
வினாக்கள் ஒன்றும்
எனக்கு நினைவிலில்லை!

வெரித்தாஸ் வானொலியில்
திரைப்படத்திற்கு விமர்சனம்
எழுதியதும், அது தெரியப்பட்டு
அதற்குப் பரிசு கிட்டியதும்
திகதியுடன் எனக்கு ஞாபகம்
இருக்கிறது!

காரணம் அன்று அந்த நிமிடம்
எனக்கென்று ஒரு அக்கா மகன்
வைத்தியசாலையில் கடும் வேதனையுடன்
விறந்து கொண்டிருந்தான்!

ஆனால் வெரித்தாஸ் வானொலி
அறிவித்த அந்தப் பரிசு மட்டும்
எனக்கு இன்னும் கிட்டவில்லை!
சுமார் இருபத்தைந்து வருடங்களாகக்
காத்திருக்கிறேன்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியது வறுமை!

பச்சை குத்திய உடலுடன்
பச்சைக் குளிரின் நடுக்கத்தில்
பிச்சைப் பாத்திரம் ஏந்திப்
பிள்ளை முகத்துடன் அவன்
கையை நீட்டினான் பிறரிடம்!

கையை விரித்து இல்லையென்று
சைகை காட்டி நடந்தனர்
விசையாக நடந்த மனிதர்கள்!

அங்கே வந்தாள் ஒருத்தி
இங்கே நீட்டினான் அவன் கையை!
கையிலே தந்தாள் ஒரு டொலரை!

பையிலே கைவிட்டு
காப்பிக் கடை தேடிக்
காப்பி வாங்க நடந்தான் அவன்!
அவளும் அதே கடைக்கு வந்தாள்!

அவன் பணத்தை வாங்கியவன்..
மீதிப்பணத்தைத் தந்துவிட்டு...
மீண்டும் காப்பியை வாங்கிக் குடி
கொல்லாமல் சொல்லால் கொன்றான்!

ஏமாற்றத்துடன் நடந்தான் ஏழை
ஏனிந்த வாழ்க்கை என்றெண்ணியே!

வீம்புடன் நிமிர்ந்து நின்று
விழுமியமற்ற கடைக்காரன் தானும்
வேகமாய் வியாபாரம் செய்தான்
வேண்டியவர் தேவை தீர்த்தே!

அன்பான பெண்ணவள் அடுத்து
அன்புடன் வாங்கினாள் காப்பிகள் இரண்டை!
ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டே
ஒன்றைத் தந்தாள் ஏழையிடம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் கூப்பி நன்றியுடன்
கைநழுவாமல் வாங்கினான் காப்பியை!

அவள் அப்பால் நடந்தபோது
அவன் கண்கள் பனித்தன!
குளிரில் நடுங்கிய தேகம்
பனியின் கொடுமையின் தாகம்!
இனியும் தாங்காத பாவம்
இல்லையென்னாத பாசம்!
கொடியது வறுமை கொடியது!
கொடியது பனியின் தாராளம்
கொடியது குளிரும் கொடியது!
கொடியது வறுமைக் குளிர்
கொடிதினம் மிகக் கொடியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை எழுப்பிவிடு அம்மா!

அம்மா அம்மா அம்மா,
என் அன்பான அம்மா!
என்னை எழுப்பிப் படிக்க வைத்துவிட
அதிகாலையில் நீ படும் பாடு!

ஆப்பா வரப்போறார் அடிக்கப் போறார்
எழும்பய்யா, எழும்பிப் படியய்யா என்று
அம்மா என்னை அடித்து விடாதே!
அன்பாக என்னை அணைத்துவிடு!

அம்மா என்னை நீ தானே
அன்புடன் தவமிருந்து பெற்றெடுத்தாய்!
எத்தனை அன்புடன் என்னைச்
சீராட்டிப் பாலூட்டி வளர்த்தாய்?

இன்று அன்பாய் என் தலை கோதி
இதமாய் என் கால் சொடுக்கெடுத்துப்
பாசமாய் என் நெற்றியில் முத்தமிட்டுப்
பரிவாய் முகம் தடவி எழுப்பம்மா!

''எழும்படா'' என்று அப்பா அதட்டுகையில்
உறங்கிக் கிடக்கும் என் உயிர்கூட
திடுக்குற்று எழுந்து திக்காடிப் போகுதம்மா!
அன்றைய நாள்கூட எனக்கு
அதிரடியாய் மாறுதம்மா!

சாந்தத்துடன் நான் எழுந்து
சந்தத்துடன் இறை புகழ் பாடி
இன்பத்துடன் உணவருந்தி
இன்முகத்துடன் பள்ளி செல்ல
எனக்கு உதவி செய்வாயா?

அம்மா என்னை அன்புடன்
ஆசையாய் முத்தமிட்டு எழுப்பிவிடு!
நீதான் என் நெஞ்சின் நிலை அறிந்த
நிரந்தரத் தெய்வம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் கனவில்

கடவுளைக் கனவில் கண்டேன்
என்ன வேண்டும் என்றார்?
கொஞ்சம் கதைக்க நேரம் கேட்டேன்..
என் நேரம் உனக்காக என்றார்!

என்ன கேட்கப்போகிறாய் என்றார்.
மனிதனைக் கண்டு ஏன் வியக்கிறீர்கள் என்றேன்...
வியப்புக்கு எல்லையில்லை
சொல்கிறேன் கேள் என்றார்!

இளமை வேண்டாமென்று
முதுமையைக் கேட்குமவர்,
முதுமையில் இளமை கேட்டு
அழுது மரிக்கின்றார்!

சுகத்தை இழந்து தினம்
உழைத்துப் பணம் திரட்டி
நோய் சேர்த்துப் பின்
பணம் கரைத்துத் தம்
நோய் அகற்றும் துயர் கண்டேன்!

எதிர் காலக் கனவுகளில்
நிகழ் காலம் மறந்து தினம்
இருகாலம் இல்லாமல்
கனவுலகில் வாழ்கின்றாரே!

கடவுளின் அமைதியில் நானும் அமர்ந்து பின்
அருமையாய் ஒரு கேள்வி அவரைக் கேட்டேன்!

அறிவுரை சொல்லும் அயலவர் அனைவரும்
தினம் கேட்டிட, மனம் திருந்திட என்றேன்!

பிறர்க்குச் செய்யும் அன்பைத் திரும்பி
எதிர்பார்க்கும் மனப்பக்குவம் விட்டுப்
பிறருடன் தம்மை ஒப்பிடும் மனமும் விட்டு
மன்னித்து மறந்திடும் நல்லெண்ணம் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடக் கணக்காய் மாறாத பிறர் மனத்து
வடுக்களைக் கேட்டு நிமிடத்தில்
அவர் குறை களைந்து
பணம் படைத்தவன் மட்டுமே மனிதனல்ல!
மனம் படைத்தவனும் மனிதனே
என்னும் உண்மையைக் கற்றுப்
பிறர்க்கு உதவி செய்து

அன்பு காட்டத் துடிக்கும் ஒருவனும்
அன்பைக் காட்டத் தெரியாது
தவிப்பதை உணர்ந்து
பார்த்திடும் இருவரின் பார்வைகள் வேறாகித்
தெரிந்திடும் எனும் உண்மையைப் புரிந்து
ஒருவரை ஒருவர் மன்னிப்பதல்லாது
தன்னைத் தானே மன்னிக்கப் பழகியும்
வாழ்க்கையை ரசித்துப் பழகியே வாழ்ந்தால்
அவர்களுடன் வாழ்வேன் என்றார் கடவுள்
நான் கண்விழித்தேன்....அவர் அங்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒருமுறை

திரும்பிப் பார்க்கிறேன்
கனவு தெரியவில்லை!
தெரிந்தால் நிச்சயம்
அந்தக் கவுதாரி, காக்கை, ஆட்காட்டி
கத்துவது என் காதுகளில் கேட்கும்!
குளத்துக்கருகில் குந்திக்கொண்டிருக்கும்
கொக்குக்கு மீன் கிட்டுமோ
நிச்சயம் என் கண்களில் கொக்குத் தெரியும்!

அது என் ஊர்பற்றிய கனவுதான்
தொடரட்டும் என்று நினைத்துத்
திரும்பிப் படுத்தேன்!
தூக்கம் கலைந்துவிட பறந்துவிட
கண்கள் தூங்க மறுக்க
ஏக்கம் நெஞ்சை நிறைக்க
மீண்டும் அந்தக் கனவு வருமா?
ஏக்கத்துடன் என் மனது!

வயல்வெளிகளில் தெரிந்த பச்சை நிறமும்
அங்கே கண்ட பச்சை அலைகளும்
கடற்கரை அருகில் தெரிந்த வெள்ளை அலையும்
காலாற நடந்த நிலமும்
மண்ணில் கால்பதித்தபோது
வந்த மனச் சாந்தி யாவற்றையும்
என் கனவு கலைத்து
அழித்து விட்டதே!

மீண்டும் வருமா என் கனவு?
கண்களுக்குள் தெரிந்திடுமா?
காட்சிகள் மறையாமல்
மீண்டும் வந்திடுமா?
ஏக்கத்துடன் கண்கள் மூடிக்
காலைக் கதிரவன் ஒளி
என் கண்ணில் பட்டுத் தெறிக்கக்
காத்துக் கிடக்கிறேன் நான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லி விடுங்கள் நீங்கள்

அன்பாய்த் தான் சொல்கிறாள்
பொழுது விடிந்த போது,
விடியா மூஞ்சியாய் இல்லாமல்
அன்பாய்த் தான் சொல்கிறாள்!
அந்தப் பஸ் சாரதிப் பெண்
காலை வணக்கமென்று!

அவள் உங்கள்
நிறம் பார்க்கவில்லை!
மனம் பார்க்கவில்லை
குணம் பார்க்கவில்லை!
இனம் பார்க்கவில்லை
மொழி பார்க்கவில்லை!

மனித நேயம் என்னும்
மாண்பு பார்த்துச் சொல்கிறாள்
காலை வணக்கம் என்று!

அவளுக்கும் வேண்டும்
ஓர் புதிய காலை...
அன்பாய் நீங்களும்
பதிலொன்று சொல்லுங்கள்!
பதிலுக்குச் சொல்லுங்கள்...
காலை வணக்கமென்று...
குறைந்துவிட மாட்டீர்கள்!
அவள் உள்ளத்தில்
நீங்களும் உயர்ந்து நிற்பீர்கள்!
பஸ்ஸை விட்டு இறங்கிச் செல்லும்போது
நன்றி என்று சொல்லி இறங்குங்கள்!

நன்றி சொல்லிப் போகும்போது
நெஞ்சில் அவளுக்கு இன்பம் பிறக்கும்!
நாமும் இன்பமாய்ச் செல்லலாம்!
நன்றி மீண்டும் சந்திப்போம் என்று
சொல்லி விடுங்களேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானத் துண்டு (Pay stub)

திரும்பத் திரும்ப
புரட்டிப் பார்க்கிறேன்!

மீண்டும் மீண்டும்
திருப்பித் திருப்பிப்
புரட்டிப் பார்க்கிறேன்!

எங்காவது என் வருமானத்தில்
எழுத்துகளில் ஏதும்
மாற்றமிருக்கின்றதா என்று
மாற்றமில்லையே!

அதே எண்கள்..
அதே கண்கள்..
அதே கைகள்..
எதிலும் மாற்றமில்லை!

என் வீட்டு வாடகை,
கடன் கூடிவிட்ட கடனட்டை,
காசு கட்டவேண்டிய
வணிகத் துண்டுகளிலெல்லாம் (bills)
இருக்கும் மாற்றம்!
ஏன் இந்தச்
சம்பளத்துண்டிற்கு மட்டும்
மாறமாட்டேன் என்கிறதோ?

என்ன மாற்றம் என்னால்
செய்ய முடியும்?
கம்பனிதான் செய்ய வேண்டும்!
இல்லை கடவுள்தான்
மாற்ற வேண்டும்!
மாற வேண்டுமென்று காத்திருக்கிறேன்!
மாறுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் என்பது..

மரணம் என்பது என்ன
மனிதச் சொத்தா?

இல்லை இவ்வுலக
உயிர்ச் சொத்து!

பஞ்சாய்க் கிடக்கும்
அந்தக் கும்பப் பனி
மூடிக்கிடக்கும் என் வீட்டு வாசலை!

அடியெடுத்து வைத்து
மெல்ல மெல்ல நடக்கிறேன்!

ஒரு கார் உயர அளவு
பனிக் கும்பத்தின் மேல்
இரண்டு பனித்தள்ளிக் கொண்டு
இருவர் பனி தள்ளி,
இரண்டு மணி நேரம்
இருவர் பணி செய்து
எழுந்து நிமிர்ந்தபோது
முதுகு வளைந்துகொண்டது!
நிமிர மறுக்கிறது!

ஒருவாறு நிமிர்ந்து
நடந்து பார்க்கையில்
கால்களில் தடுக்கிடுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் தெரியவில்லை ஒன்றும்
இரவு பத்து மணி!

என்ன அது?
ஓ..ஓ..அது ஒரு பூனை!
ஆ..என்ன இது..
மரணித்து மரத்துக் கிடந்தது
அந்தப் பூனை!

பசிக்கு உணவு தேடி வந்து
ருசிக்க முடியாத போது
பனியில் மூடப்பட்டு
மரணித்துப் போன
ஒரு ஜீவன்!

மனிதனுக்குச் செய்வது போல்
ஒரு மரியாதை சவ அடக்கம்!

அத்தனைதான் செய்ய முடியும்
இந்த அடாத குளிரில்!
இந்த ஆன்மாவும்
சாந்தி பெறட்டும் ஆண்டவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை மாறட்டும்


காக்கைச் சத்தம் காதுகளில் ரீங்கரிக்க
வெயிலின் கோரம் வெக்கையாய்ப் பறக்க
காய்ச்சலும் தடிமனும் காய்ந்து தள்ள
இன்னும் ஒருநாள் எப்படித் தாக்குப்பிடிக்க?

மனத்துக் கேள்விகளே மாயமாய்க் கிளம்பியெழ
யாரைக் கேட்பது? யார் பதில்சொல்வது?
எல்லாமே மாயமாய் இன்னும் தெரிந்திட
கோடை வந்தது கொல்லவோ இல்லை!

ஆடை குறைத்து ஆபாசம் காட்டிடும்
இளம் குமரிகளின் இடைகாட்டும் நர்த்தனத்தில்
ஆடவர் மனங்களும் ஆடித்தான் போகின்றன!
ஏனிந்த வேகம்? ஏனிந்த அகோரம்?

மாயமான சூரியனின் மனிதாபிமான செயல்
மாறுமோ குளிர்வந்து மாற்றுமோ இயற்கையை!
இக்கரைக்கு அக்கரைதான் இன்பம் தருமென்பது
எத்துணை உண்மை! எத்தகைய தண்மை!

மாறட்டும் காலங்கள்! மாற்றட்டும் கோடையை!
பாரெட்டும் வகையிலே பண்புகள் பிறக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் தினம்

அடக்குமுறை கண்ட பெண்ணினமே!
உன்னை அடக்கித் திரிபவர் ஆண்களா?

பேதைப் பெண்களே சிந்திப்பீர்!
உம்மைக் கோடு போட்டு
நிற்கச் சொல்வது உம் குலத்தவரே!

சீதனக் கொடுமையில் சீறிடும் அடுப்பில்
சிதைந்து போகுமுங்கள் சீரிய உடல்!

பணிந்து பணிந்து தொலைந்ததோ
உங்கள் பண்பான மாண்பு!

கலாச்சாரம், குடும்பம், சமுதாய அக்கறை
குடும்பச் சூழலென்று
அடக்கப் பட்டபோது அழிந்ததுவோ
உங்கள் அருமையான வாழ்வு!

லெனின் வழித்தோன்றலாய் ஒரு
''றோசா லக்சம்பேக்'' குரலெழுப்பிக்
காட்டிட உலகமும் தலை திருப்பிட
சீன தேசமும், அமெரிக்க மகளிரும்
அடித்தடித்துக் குரலெழுப்பிக் காட்டி
ஐ.நா. அடியெடுத்துக் கொடுக்க
உருவான இந்தச் சர்வதேச மகளிராண்டு!

ஆனாலும் உனக்கு என்ன தந்தது
இன்னும் அடிமை வாழ்வுதானே!

முழுநேரத் தொழில் புரியும் உனக்கு
அடுக்களையில் காத்திருந்தது
மறுமுழு நேரத் தொழில்!
குழந்தை வளர்ப்பு, கல்வி வளர்ச்சி
குழந்தை பராமரிப்பு, இத்யாதி
எல்லாமே ஆணுக்கல்ல!
உனது பொறுப்பென்றது ஆணினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் காமக் காரிகையாய்த்
தன்நிலை மறக்கப்பட்டு மரிக்கப்படும்
உனக்கேது சுதந்திரம்?

கலாச்சாரத்துக் கட்டுப்பாடுகளால்
நிராகரிக்கப்பட்ட உன்
பெண்ணினத்துத் தேவையைத்
தேடிப் பார்!

உன்னை மிதிப்பதால்
எவர்க்கு என்ன லாபம்?
உன் வாழ்வின் உச்சியை
நீ எப்போது அடையப்போகிறாய்?
உன் முன்னேற்றம்
யாரால் அங்கீகாரம் பெறப்போகும்?

ஆதிக்கத்தின் கீழ்நீவீர் காண்பது
தோல்விதான்!
வானம் நடக்காது, பூமி பிறழாது!
சூரியன் ஒரு துகளாய்
உன் கண்ணில் தெரியும்!
அங்கே ஒளி பிறக்கட்டும்!

பிறரின் அன்பால் நீ
பாலம் போடமுடியாது!
பள்ளத்தில் கிடக்கும் நீ
மேட்டிலேறி, கீழே பார்!
உனக்குக் கீழே உன்னைத்
தாழ்த்தியவர்கள் தெரிவார்கள்!
உன்னைச் சுற்றிக் கிடக்கும்
வட்டத்தை விட்டு வெளியே
வந்து வானத்தைப் பார்!

சுதந்திரப் பறவைகள்
உனக்கும் பாடம் சொல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்திற்கேற்ப உலகம்

தாயின் ஓலத்தை உதறித்
தள்ளியபடி ஒரு குழந்தை பிறந்து
தன் அழுகைக் குரலைத்
தெளிவாகச் சொல்லித்
தான் உயிரோடிருப்பதை
உலகுக்குச் சொல்கிறது!

உறங்கிக் கிடக்கும்
முதுமையொன்று
மூச்சுக் காற்றைக் கடன்கேட்டு
மன்றாடிப் பெற்றபடி
மயங்கிய நிலையில்
சயனித்துக் கொண்டிருக்கிறது!

கனவுகளில் நிலைத்தபடியே
காதலை எண்ணிக் காற்றில்
பறந்து கொண்டிருக்கும்
ஒரு கல்லூரிக் காளை
தன்னை மறந்து
கண்களில் நிறைந்த
கண்ணீரைத் துடைக்கிறான்!

காதல் தோல்வியால்
விண்ணில் பறக்கும் ஒரு
மாடப்புறா பறக்கும் திசை
விட்டு வேறு திசை தேடி
இடம் மாறி முகவரி மாறி
எங்கோ பறந்து திரிகிறது!
யாரைத் தேடுகிறது?


நேரம் மாறிப் பெய்த மழை
நிச்சயம் நோய் கொண்டு
வரப் போகிறது என்று
ஏக்கத்துடன் வாடும்
கிராமத்துக் கிழவனின் மனது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்து விட்டு
ஆடை மாற்றிய
தன் பொன்னுடலை
வேற்று ஆடவனொருவன்
கண்டுவிட்டான் என்று
தற்கொலைக்கு முயற்சி
செய்த பெண்ணொருத்தி!

காற்றடித்த போதும்
வெயில் அடித்தபோதும்
தன் கடமைக்கென்று
சிதறிப் பறந்து போகும்
சின்னச் சின்னப்
பனிச் சாரல்கள்!

எல்லாமே எதற்கோ
நடப்பது போலிருந்தாலும்
எல்லாம் நடப்பது
உலகத்தின் உருளலில்!
தானும் உருள்கிறது
உலகம்..உலகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடங்கள்

காலக் கருவறையில் பாடம் படிக்கவந்த கோலக் கொடிகளே!
தாயின் கருவறையில் கருவமர்ந்த காலமுதல் தனியேகற்ற கல்விதனைக்
கோடிட்டுக் காட்டிக் குடிகளை மேலேற்றிக் காவியமாக்கி
நல்லபாலம் கட்டிநின்றே பாடம் புகட்டியதைப் பகர்ந்திடுவீர்!

பாடங்கள்..நாம் கற்று வந்த பாடங்கள்
தேடுங்கள்..தினமும் நல்ல வழிகளைத் தேடுங்கள்!
நாடுங்கள்..நல்ல நட்பு முறைகளை நாடுங்கள்
ஓடுங்கள்..உலக வாழ்வதனைத் தேடி ஓடுங்கள்!

பாலவயதில் பள்ளியில் பயின்ற பாடங்கள்!
ஞாலமதில் திருமணத்தில் நாமறிந்த பாடங்கள்
ஆலமாகிக் கண்டுதிருந்திய அனுபவப் பாடங்கள்!

என்ன பார்க்கிறோம் எங்கே பார்க்கிறோம்?
இன்னும் பார்க்கிறோம் இளமையைப் பார்க்கிறோம்!
சொந்தம் பார்க்கிறோம் சொர்க்கம் பார்க்கிறோம்
பந்தம் பார்க்கிறோம் பாசத்துடன் பார்க்கிறோம்!
வாழ்ந்து பார்க்கிறோம் வாஞ்சையுடன் பார்க்கிறோம்
ஆழ்ந்து பார்க்கிறோம் ஆசையுடன் பார்க்கிறோம்
கூர்ந்து பார்க்கிறோம் கூட்டாகப் பார்க்கிறோம்!

பாடங்கள் பார்க்கிறோம் பாரங்கள் பார்க்கிறோம்
வாழ்வைப் பார்க்கிறோம் வாழ்ந்தும் பார்க்கிறோம்!
இரவில் தெரிவது இளஞ் சந்திரனா
இரவை மறைப்பது இளமைச் சூரியனா?
கண்ணில் தெரிவது கவின்மிகு காட்சிதானா
விண்ணில் தெரிவது வகையுள்ள விண்மீனா?
எண்ணத்துள் நுழைவது எல்லையிலா இயற்கைதானா
எல்லாமே வருவது எம்மனக் கணக்கில்தானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப்போரின் அனர்த்தத்தால் அனுபவித்த பாடங்கள்
வாழப்போர் நடாத்தும் வாழ்க்கைப் பாடங்கள்!
நாளுக்கு நாள்சேரும் நல்லதமிழ்ப் பாடங்கள்
தோளுக்கு உரம்தந்திடும் தோல்விப் பாடங்கள்!

இனிவரும் சந்ததிக்கு இனிப்பான பாடங்கள்
இன்றுவரை நாம்படித்த இயல்பான பாடங்கள்!
மானிடத்தைக் கொன்றுவிட மாண்டிடும் பாடங்கள்
வானிடத்துத் தெய்வங்களும் வாய்கதறும் பாடங்கள்!

பூகோளம் சொல்லித் தரும் திசைகள்
பூமிக்குள் ஒளிந்து கொள்ளும் கதைகள்!
சுனாமிக்குள் மறைந்து நின்ற அலைகள்
வினாடிக்குள் பிரிந்து சென்ற உயிர்கள்!

விடைகாணாக் கேள்வியுடன் தினம்
விழித்தெழும் மனிதர்கள் சிலரோ
நடைப்பிணமாய் வாழ்ந்திங்குத் தாமே
நடந்திடுவார் வான்பயணம் தனியே!

படைதிரட்டிப் பார்த்திருக்கும் மனிதர்
பழைமைத்தனம் நீக்கப் பாடிடுவோம்!
இடைவிடாத சேவைசெய்து நாளும்
இகபரத்தில் புகட்டிடுவோம் புதுப்பாடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டு பிறந்துள்ளது

புத்தம் புதிதாகப் பிறக்கிறது புத்தாண்டு
புதிதாய்ப் பிறந்த புதிய இந்த நன்நாளில்
சென்று கழிந்த பழைய ஆண்டுடன் அழிந்தது துன்பம்
இன்பமாய்ப் பிறந்தது இனிய புதுப்புத்தாண்டு!

மனத்தில் பிறந்திட்ட ஆசைகளெல்லாம்
கணத்தில் நிறைந்திடும் நினைவுகளாய்
நேற்றைய தினமும் இன்றைய தினமும்
காற்றுடன் கலந்திடும் கனவின் கலைகள்!

இறைவன் வகுத்த வழிகளில் நடந்து
புவனம் தனிலே புன்னகை விளைப்போம்!
அயலார்க்கு உதவிடும் அன்பு வாழ்வுடன்
உயரத்தில் பறந்திடும் மகிழ்ச்சியை அடைவோம்!

மனித நேயத்தின் மாண்பினை வாங்கிக்
கனிவுடன் வாழ்ந்து காலத்தைக் கடத்திக்
குறுக்கிடும் சோகத்தைக் கொஞ்சம் விலக்க
செருக்குடன் உலகில் செல்வோம் வெல்வோம்!

புதிதாய்ப் பிறந்த வருடத்தைப் போல் நாம்
புவனத்தைக் காப்போம் புதுமொழி சொல்வோம்!
நேசமே எங்கள் மனத்தின் வேதமென்போம்
தேசமே எங்கள் இனத்தின் தாகமென்போம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை மனிதர்கள்

அன்னை வயிற்றினில்
பண்புடன் பிறந்தபோது
சின்ன உயிராகிச்
சிரித்து மகிழ்ந்தவர்கள்
பின்னே வளர்ந்ததும்
தம்நிலை மாறியங்கே
உடையும் உடலும்
நடையும் நளினமும்
சடையும் மாற்றியங்கே
படைத்திடும் கோலங்களில்
கேளிக்கை காட்டிடும்
வேடிக்கை மனிதர்களே!

இனத்தின் மானம்காக்க
மனத்தில் துணிவுகொண்டு
தனித்து நின்று போராடி
மிதித்திட்டான் எதிரியை!
தமிழினத்து வீரனென்று
அப்பெயரை உச்சரிக்க
இச்சகத்தில் சிலமனிதர்
இழிவென்று கருதியங்கே
எடுத்திட்டார் போர்க்கோலம்!
தடுத்திட்டார் தமிழர்களை!
காட்டிக் கொடுத்திடும்
வேடிக்கை மனிதரிங்கே!

கூட்டைப் பிரித்துக்
குருவிகளைக் கலைத்துக்
காட்டை அழித்து
நாட்டைப் பிடித்துவிட்ட
காட்டு மிராண்டிகளைப்
பாட்டில் பாட மனமில்லை!
ஆவி துடித்து அழுது
நெஞ்சு தவித்துக் கனக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவித் தமிழினத்துக்கு
ஞாலத்தில் விடிவில்லையா?
கேட்டுச் சிரித்திடும் சில
வேடிக்கை மனிதரங்கே!

நாட்டில் அவலமங்கே
ரோட்டில் வாருங்கள்
போராடிக் காத்திடுவோம்!
வாதாடிச் சமர்புரிவோம்!
மாணவர் சமூகமிங்கே
மண்டியிட்டுக் கேட்டுநிற்க
வீட்டுச் சோறு தின்று
ஏப்பமிட்டு இடைபெருத்துக்
கூச்சலிட முடியாதென்று
காய்ச்சவென்று பொய்சொல்லி
நாடகமாடி நடித்திடும்
வேடிக்கை மனிதர்களுமிங்கே!

வீதிக்கு வந்து எங்கள்
பாதையை மறைத்து நீங்கள்
சாலை மறியல் செய்யாது
காலையே ஊர்போங்கள்
கனடா எம் நாடென்று
கனமாய்க் கூறும் கூட்டமொன்று
அரசியல் லாபம் தேடும்
அதிகார வர்க்கங்களும்
பழிபாவமென்று வாய்மூடித்
தனிமையாய் விட்டிட
தடியடித்திடும் போலிசும்
வேடிக்கை மனிதர்களே!

நாதி யற்றவர்களாய்
நல்லவன் வழிசென்று
வாழ்வோம் என்றொரு
நம்பிக்கை கொண்டிங்கு
வாழும் மாணவர்கள்!
உணவை, உடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறக்கத்தை மறந்து
தயக்கமின்றி மயக்கமின்றித்
தன்னம்பிக்கை உணர்வுடன்
தேடிக் கிடக்கின்றார் வீதிகளில்
அவர் பின்னே நாமும்
வேடிக்கை மனிதர்களே!

விடியலொன்று வேண்டுமென்று
வேதனை மனத்துடனே
மரணத்துப் பயத்துடன்
அரக்கரது மிரட்டலுடன்
வாழ்க்கையை வெறுத்துத்
தாழக் கை பதித்துக்
குறுகிய வாழ்வைத் தேடிக்
கறுக்கப்பட்ட மக்களிவர்!
நச்சுப் பாம்புகளிடம்
பிச்சை கேட்டுக் கையேந்தி
எச்சிலான மனிதரது
துயரமும் வேடிக்கைதானோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனியின் அழகு

இன்னும் கொஞ்சம்
என்னைக் கொஞ்சும்
மின்னல் வெள்ளைப் பனியே!
தன்னைத் தொட்டுக்
கண்ணை வெட்டிக்
காற்றில் பறக்கும் ஒளியே!

சின்னப் பறவை
மண்ணில் அமர்ந்து
எழுந்து பறக்கும் நிலையில்
வண்ண ஒளியில்
விண்ணை அளந்து
மேலும் கீழும் நடந்து
அன்னைத் தமிழின்
அழகு வார்த்தை
அள்ளித் தந்திடும் நடைபோல்
பண்ணில் பாடி
மண்ணில் ஆடிக்
கழித்திடும் சின்னத் தழலே!

உன்னைப் போன்ற
சின்ன உடலொன்று
இல்லை நானும் உலவி
விண்ணிலிருந்து இங்கு
வந்து பறந்து சிதறி
மண்ணை நனைத்திடும் அழகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்


இடத்தை, பொருளை உணர்த்தும்
உலகை வலக்கையால் நகர்த்தும்!
மனத்தை நினைவில் நிறுத்தும்
இனத்தை மறந்து நடக்கும்!

காலத்தின் கணக்கு விசித்திரமானது
காலம் இல்லை எனில்
இந்த ஞாலம் இல்லை!
காலக் கணக்கு நிரந்தரமானது
மாறாதது, மாறக் கூடாதது
மாற்ற முடியாதது!

எத்தனை கணக்குகள்?
எத்தனை பிணக்குகள்?
எத்தனை இணக்கங்கள்?
எத்தனை விளக்கங்கள்?

காலத்தின் கோரப் புயலினுட்
சிக்கியது இந்த ஞாலம்!
பயப்பட்டுதான் ஆகவேண்டும்!

மனிதனும் காலத்தின் பிடியில்...
இவன் மட்டும் என்ன
விதி விலக்கா?
மனிதனே ஓடிப் பார்!
காலத்தோடு நீயும்
விளையாடிப் பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

அகரத்தைத் தொடங்கிய ஆசான்
சிகரத்துக்கு ஏற்றிடும் ஆசான்
உயரத்தில் ஏற்றிவிடும் ஏணியாய்
உலகத்தைக் காட்டிடும் ஆசான்!

வாழ்க்கையின் வசதிகள் காட்டி
வாழச் சொல்லிடும் வழிகாட்டி
வாழ்க்கைப் பாதையின் நெளிவுகளை
வலி தெரியாது விளக்கும் காரியவாதி!

அறிவின்றி மங்கிக் கிடந்த பல
அறிவற்ற புத்திசாலிகளை
அறிவுள்ள பலசாலிகளாய்த் தீட்டி
அறிவு புகட்டிடும் திறமைசாலி!

காலத்தின் முக்கிய நிலையைக்
காரணம் காட்டியே தினம்
காலை மாலை கல்வியால்
காரியம் நிகழ்த்திடும் கலைவாதி!

விடியலின் சுக போகத்தையும்
விதியின் சுர கீதத்தையும்
விழிகளின் கண்ணீர் மழையையும்
விசாரித்து ஆற்றிடும் ஆசான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த தானம்

இன்னொருவர் நலம் காத்திரங்கி
இன்னொருவர் துயர் போக்குமின்பத்தில்
எத்தனை மகிழ்ச்சி எத்தனை மகிழ்ச்சி
அத்தனை மகிழ்விலும் மனத்தினில் கிளர்ச்சி!

அத்தனை நிகழ்விலும் எத்தனை நெகிழ்ச்சி
எத்தனை சக்தி என்னுள் எத்தனை சக்தி!
இன்னும் இனிக்கும் இள மனத்து வெற்றி
மண்ணில் நிலைக்கும் மனித மன முக்தி!

எத்தனை நிறங்கள் எத்தனை மனங்கள்
எத்தனை குணங்கள் எத்தனை குலங்கள்!
அத்தனை மனிதரிலும் எத்தனை எண்ணங்கள்
மனிதத்தை மதிக்கும் மனிதநேய வண்ணங்கள்!

குருதியின் நிறம் சிவப்பென்று ஒன்றாய்
உறுதி சொன்ன பெரியவர் சிறியவர்!
தானம் தந்துநின்றே தம்மவர் மனிதத்து
மானம், மாண்பு காத்து நின்றார்!

நானும் ஒரு துகளாய், பொறியாய்
வானின் கீழோர் நிழலாய் நின்று
பாசம் காத்து மனித நேயம் பார்த்துத்
தானம் செய்ய நடந்து சென்றேன்!

ஒருமுறை இருமுறை மட்டுமல்ல என்றெந்தன்
உயரிய இரத்ததானம் இன்றும் தொடர்ந்திடவே
சுமார் 34 தடவைகள் இதுவரை தந்து
சுகமாய்க் காத்திட்ட உயிர்கள் மகிழ்கின்றன!

எத்தனை தாய், தந்தை, தம்பி, தங்கை
அத்தனை அண்ணன், அண்ணி, மாமன், மாமி
நல்ல நட்புகள், நேசங்கள், பாசங்கள், எல்லாம்
நலமாகிட உதவும் என் இரத்த தானம்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரைத் தேடி ஓடுகிறது நதி?

யாரைத் தேடி ஓடுகிறது நதி?
மழை பெய்த நிலத்தில் தன் ஈரலிப்பை விட்டுத்
தன் பாதை தேடி ஓடுகிறது தண்ணீர்!

எங்கே போகிறாய் என்றது காற்று
காற்றின் திசையுடன் ஓடியது தண்ணீர்!
வழியில் குறுக்கிட்ட மரத்தில்
முட்டி மோதியது தண்ணீர்!

மரம் தன் தலை நிமிர்த்திக் கேட்டது
தண்ணீரே எங்கே உன் பயணம்?
பதிலின்றி ஓடியது மழைத் தண்ணீர்!

குடித்து நிறைந்து திருப்தியில்
எங்கே போகிறாய் என்றது மண்!
பதிலின்றி ஓடியது மழைத் தண்ணீர்!

நீரோட்டத்தில் அடித்து வரப்பட்ட
இலை கேட்டது
எங்கே உன் பாதை போகிறது?
நீர் எதுவும் சொல்லாது ஓடியது!
யாரைத் தேடி ஓடுகிறதோ என்று
அனைவரும் வியந்தனர்.

மனிதன் ஒருவனைக் கண்டது தண்ணீர்!
நீ உழவனா என்று கேட்டது
இல்லை நான் மனிதன்.

உனக்கு என்ன வேண்டும்?

நான் உழவனைத் தேடி வந்தேன்
நீ உழவனில்லை
உன்னுடன் எனக்குக் கதையில்லை!

தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது!
மனிதனும் நீரோட்டத்துடன் ஓடினான்!
என்ன வேண்டும் என்றது தண்ணீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நான் உழவனாக என்ன
தகுதி வேண்டும்?
திருக்குறளை நீ படித்ததில்லையா?
முதலில் அதைப் படி!

''உழுதுண்டு வாழ்வார்
முன்நின்று உரிமையுடன் வாழ்வார்
மற்றவர் அவரைத்
தொழுது பின் செல்வார்''

நீ அந்த உழவனானால்
முன்னுரிமை பெற்று நிற்பாய்!
ஆக மனிதரில் நீ
உயர்ந்தவன் ஆவாய்!

சொல்லிக் கொண்டு ஓடிய தண்ணீர்
நதியிடம் சென்று சரணடைந்தது!
அந்த நதிக் கரையில் ஒருவன்,
அவன் உழவன்!

ஆம் அந்தத் தண்ணீர் சொன்ன அறிவுரை
கேட்டு உழவனானான் மனிதன்!
உழவனைத் தேடி ஓடியது
அந்தப் புதிய தண்ணீர் நதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் அழுகை

காஞ்சிப் பட்டுடுத்தி
உன் காதலன் அருகில்
திருமணக் கோலத்தில்
இந்தப் பாச மண்ணை
நீ வலம் வரும்போது நான் தனியே!

என்னை நீ தனியே விட்டுவிட்டு
உன் கணவன் அருகிலே,
நான் தனியே உன்னைப் பிரிந்து
அழுகிறேன் மகளே!

மகளே என்னை மன்னித்துவிடு!
நான் அழுகிறேன்
உன்னை வாழ்த்துவதை விட்டு
நான் அழுகிறேன்!

மற்றவர் கண்ணிலே நீ மணப்பெண்!
பெற்றவள் எனக்கு நீயோ
இன்னும் சின்னப்பெண்!

இன்றைய உன் ஆடை அலங்காரம்
உனது இளமை, உனது அழகு!
உலகுக்கும் உன் கணவனுக்கும்
நீ அழகு தரும் இன்பத் துளி!

அதுவே என் கண்களில்
வடிந்திடும் பிரிவின்
கொடுமையின் கண்ணீர்த் துளி!

ஆம் மகளே என் கண்களில்
நீ இன்னும் சின்னப்பெண்!
என் கைகளில் இன்னும் நீ
சின்னக் குழந்தைப் பெண்!

கருவறையின் கறுப்பறையில்
நீ அன்று ஜெனித்தபோது
ஊர்ந்திட முடியாத உன்னுருவம்
அன்று எனக்குச் சொந்தம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ மழலையாய் ஜெனித்த போது
எனக்கும் உன் தந்தைக்கும்
நீ தந்தது பெற்றவர் என்னும்
பெருமைச் சொந்தம்!

மழலை இன்பம் தந்து,
தவழ்ந்து, குறுநகை புரிந்து
உருண்டு புரண்டு, எழுந்து, நடந்து
நீ காட்டியது குழந்தைப் பருவம்!

மூன்று வயதான போது
நீ காட்டிய அழகுக் குறும்பு!
எனக்கு மட்டுமே இன்பம்
கூட்டிய சொந்த அரும்பு!

கன்னிப் பருவத்திலே சின்னப்பெண் நீ!
என் எண்ணத்திலே வளர்த்தது
எத்தனை எண்ணங்கள்!

அன்று மகிழ்ச்சி வெள்ளத்திலே நான்!
இன்று கண்ணீர் வெள்ளத்திலே
யாருமறியாமல் நான்!

என்னுடன் கூடி நீ அன்று
எடுத்து வைத்த முதல் அடி
இன்று போல் என் நினைவில்
நிற்குதடி மகளே!

இன்று இப்படி வளர்ந்ததை
அன்று நான் அணு அணுவாக
ரசித்தேன் மகளே!

இன்று என்னைத் தனியே விட்டு
உன் கணவன் பாதை நடக்க
என் நினைவு துடிக்கிறது மகளே!


உனக்கென நான் சேர்த்துத் தந்ததோ
என் அன்பும், ஆசியும்
முத்தமும் உன் தாய் வீட்டுச்
சொந்தமும் சொத்தும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நீ எனக்கு
விட்டுச் செல்வதோ
மகளே, மகளே
என அலறும்
என் நெஞ்சின் நினைவுகளும்
அதன் நோவுகளும்!

காலம் நம்மைப் பிரித்தாலும்
காதற் கணவனின் அன்பும் ஆசையும்
பாலில் உனது பண்பும்
என் பாசமும் பரிவும்
பிரியாது காத்திடும் என் மகளே!

உன்னைப் பிரிந்து நான்
தனித்து விட்டாலும்
என்னைத் தொடர்ந்திடும்
உன் நினைவுகளுடன்
நான் தைரியமாக வாழ்வேன்!
நீ நீடூழி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணப் படுக்கையில் இருந்து ஒரு கடிதம்


பிரியமுள்ள குழந்தைக்கு
நீ நலமா?
உனக்காகத்தான் காத்திருக்கிறேன்
நீ வரும்வரைக்கும்
என்னுயிரைப் பிடித்துவைத்து!

உடலில் மட்டுமல்ல என்
மனத்திலும் நலமில்லை என்று
சொல்ல வேண்டுமா உனக்கு!
என் நிலை நீயறிவாயே!

எனது உறவுகளின் ஒவ்வொரு
பிறப்பிலும் அவர்கள்
சபிக்கப்பட்டவர்களாகத்
தெரிகின்றனர் என் கண்களுக்கு!

என் தமிழினம் கால் பதிக்கும்
அத்தனை இடங்களிலும்
ஏதோ ஒரு சோதனை
ஏனோ ஒரு சோகம்!

பின் தொடர்ந்து வந்து
ஏவாளை ஏமாற்றிய
நச்சுப் பாம்பு போல்
நசுக்கி எடுக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் நாடுகளில் தஞ்சமடைந்த
அத்தனை தமிழர்களிலும்
அழிவின் கோலம்
நர்த்தனமாடி நடிக்கின்றன!

நாய்க்கு நடுக்கடலிலும் நக்கித்
தண்ணீர் குடிக்கும் தலைவிதி போல்
என் தமிழர்களின் தலையிலே
ஏன் தனியான விதியொன்று?

மனித நடமாட்டங்கள்
மரணித்த என் மண்ணில்
பண்பட்ட செம்மண் தரை!
கண்ணி வெடிகள் விதைத்து
ஆல விருட்சங்கள் வளர்ந்து
தொங்கும் விழுதுகளுடன்
தங்கிக் கிடக்கின்றன!

பாதகர்களால் அழிக்கப்பட்ட
உயிர்கள் அங்கேயும் சென்று
சில பாசக் கயிறுகளாக அணைத்துப்
பரிதவித்து மரணிக்கின்றன!

என் தமிழினத்துக் குருதி
படர்ந்த செம்மண்ணிலே
வீரச் சாவென்று சொல்லி
எத்தனையோ நாளைய உலகத்தைக்
காக்கவேண்டிய சந்ததிகள்
செத்து மடிந்தனவே!

என் மடியில் தவழ்ந்த
பூக்களும் சிறு பூச்சி உயிர்களும்
நான் விளையாடிய அத்தனை
இடங்களும் காணாமல் போவதைக்
கைகட்டிப் பார்த்து நிற்க
நிர்ப்பந்திக்கப்பட்டவளாய்
உறவுகளை உடைமைகளை இழந்து
உரிமைகள் பறிக்கப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காலம் போலக் காடு, கரம்பைக்
குழிகளில் வாழப் பழகிய புதிய நாகரிகம்!

தோண்டப்பட்ட குழிகளும்
சுடுகாடுகளும் அழிந்து
விளைநிலமாக மாற்றம் பெறட்டும்!

அங்கே வீட்டுத் தோட்டம்
விருத்தி யடையட்டும்!
துப்பாக்கிக் குண்டுகளால்
துடைக்கப்பட்ட கண்ணீர்த்
துளிகளில் சாந்தம் காண்போம்!

ஆயுதங்களும் சேனைகளும்
செயலற்றுப் போனது போல்
ஒற்றை யாயுதமாக அன்பு மொழியைப்
பிரகடனப் படுத்திச் செயலாற்று!

இறந்து கிடக்கும் எம்
இளம் சந்ததியின் உடலங்களின்,
உயிரற்ற உடல்களின் கோலம் பார்த்துக்
கோரமாய்க் காமம் செய்யும்
பாதகர்களின் செயல்கண்டு - அவர்
பார்வையைக் கொய்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகள்

காலங்கள் எமக்காகக் காத்திருக்க
ஞாலமது எம் மக்களுக்குப் பார்த்திருக்க
வாழ்வின் கனவுகள் எம்மவர்க்காக
வசந்தமாய் மாறிட நாமிங்கே
நல்லபடியாக வாழ்ந்திட எம் வாழ்வின்
குப்பைகளைக் கூட்டிக் கொளுத்துவோம்!

உறவுகளின் உண்மை மனத்து
நிறைவுகளை நிஜமாய்ச் சேர்த்து
நல்ல தரவுகளாய் நாமே மாற்றிக்
கள்ளமற்ற மனத்துக் கனிவுடன்
வல்லமை சேர்த்து வாஞ்சையுடன்
குப்பைகளைக் கூட்டிக் கொளுத்துவோம்!

மனக்குளத்தில் நித்தம் சேர்ந்திடும்
மாயமான மனத் துயரத்துச் சோகங்களைத்
துன்பங்களைத் துயரங்களை ஏக்கங்களை
ஏமாற்றங்களை இதயத்துக் கவலைகளை
நீசமென்றெண்ணி நாமும் நித்தமும்
குப்பைகளாய்க் கூட்டிக் கொளுத்துவோம்!

கற்பனை நினைவுகளைக் கனவாக்கி
விற்பனை போய்விடும் வாலிபர்தாம்
நித்தமும் சத்திய வாழ்வை வாழ்ந்து
மிச்சமுள்ள வாழ்வை மேன்மையாக்கிச்
சத்தியமான வாழ்வைச் சாத்தியமாக்கிக்
குப்பைகளைக் கூட்டிக் கொளுத்துவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் கல்வி

இளமைக் கல்வி இனியில்லை என்றாலும்
இன்பமான வாழ்வு இனிவரும் என்றிருங்கள்!
முதுமைக் கல்வி அது முக்கியமானது
முழுவதும் உண்மையிலும் மிகவும் உண்மையே!

அனுபவம் தந்த அற்புதக் கல்வியே
அடையாளமாக இதயத்தில் அமர்ந்திருக்க
சின்னக் குழந்தையையும் சிந்திக்க வைக்கும்
சிந்தைக் கல்வியால் சீருடனே காப்பீர்!

பாடும் இளமைப் பாட்டிலும் எமக்குப்
பாடம் சொல்லிடும் பாட்டியே! பாட்டனே!
நாட்டிலே நல்லவை உங்களின் அறிவுரை
நயத்துடன் தந்திட நன்கு கற்றிடுங்கள்!

ஆங்கிலம் தெரியாத அப்பாவிப் பெற்றோரே
ஆங்கில நாட்டிலே ஆதிக்கம் இழந்தீரே!
மந்தைகளாக நாம் மறக்கப் பட்டாலும்
மதிநுட்பத்துடன் கற்றுத் தெரிந்திடுவோம்!

கோட்டையில் இல்லாத கோ மகான்களே
வீட்டையும் ஆண்டிடும் வேத நாயகர்களே!
வலைத்தளம் கண்டே வானரமாய் நீங்கள்
வானம் எல்லை கண்டு வாழ்வீர்களே!

காலை விடிந்தாலும் காகிதம் படித்தாலும்
காணி நிலம் பற்றிக் கண்ணுருகி நின்றாலும்
வாணி அவள் பாதம் பணிந்து நின்றே
பாண்டித்தியம் பெற்றிடக் கற்றிடுவோம் கல்வி!

யோகாசனம் கற்று யோகநிலை பெற்று
யோகவாழ்வு காணும் யோகம் கொண்டோரே!
ஆகா இந்த உலகம் எமக்கென்று எண்ணி
ஆவேசமாக உங்கள் கல்வியைத் தொடருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதத் தாய்


அன்னைக்கு நிகராக அன்பு தரும் தாயே
எண்ணக் கருவினை உன்னில் தரித்தாயே!
கண்ணின் மணியென என்னை வளர்த்தாயே
மண்ணில் என்வரிகள் நிலைத்திடச் செய்தாயே!

காலைக் கருக்கலில் என்னைப் பாடவைத்தாய்
மாலைச் செம்மலிலும் நான் படைக்கச் செய்தாய்!
எழுத்து, பாட்டு, ஓவியம், கவிதை, நாடகம் என்று
எத்தனையோ எழுத வைத்த என் காகிதத் தாயே!

பாசத்தை எழுதினோம் வேசத்தை எழுதினோம்
நாசத்தை எழுதினோம் நல்லதையும் எழுதினோம்!
காலத்தைப் பொன்னென எண்ணியே எழுதினோம்
வாழ்வைக் காத்திடும் வாசகங்கள் எழுதினோம்!

காவியம் வளர்ந்தது ஓவியமும் மலர்ந்தது
நாளைய காலத்தின் தேவைகளும் தெரிந்தது!
எழுதிவைத்து எடுத்துவைத்துச் சேர்த்து வைத்தோம்
இருப்பதை நாளை சேமித்தும் வைத்தோம்!

இத்தரையில் உன் பிறவி இல்லாமல் போயிருந்தால்
நித்திரையாய் இருந்திருக்கும் இவ்வுலகமன்றோ!
புத்தியுள்ளோராய் நாம் திகழ்ந்திட எம்மைச்
சத்தியுடன் எமைப் படைத்திட்ட தாயே!
வாழ்க வாழ்க நீ வளத்துடன் வாழ்க நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தலைப் பகைப்போம்

புகைந்திடும் உன் கைச் சுருட்டைப் பார்!
புகையாத உன் வீட்டின் அடுப்பைப் பார்!

சுருங்கிடும் உன் குழந்தையின் சுகத்தைப் பார்!
வற்றிப் பசித்திடும் உன் குழந்தையின் வயிற்றைப் பார்!

ரசித்துப் புகைத்திடும் உன் சுயநலத்தைப் பார்!
விரயமாகிடும் உன் குடும்பப் பொருளைப் பார்!

வறுமையில் வாடிடும் உன் குடும்ப நலனைப் பார்!
பொறுமை காத்திடும் உன் மனையாளின் நிலையைப் பார்!

இரு விரல்களிடையே எரிந்திடும் நெருப்பைப் பார்!
தம்நிலை தெரியாது புகைந்திடும் உன் குடும்பம் பார் !

யாருக்காய் நீ இந்தப் புகைத்தலைச் செய்கிறாய்?
யாருமே வேண்டாத நோயை உன்னுள் சேர்க்கிறாய்

நாளுக்கு நாளாய் உன் உயிரைக் குடித்திடும் புகை!
வாழ்வுக்கு உறுதியற்ற நிலை தந்திடும் புகை!

புகைத்தல் தந்திடும் உடலுக்குக் கேடு
சுவையின்றியே பாழாகிடும் உன் வாழ்வு!

கவலை சிறிதுமின்றி நீ புகைத்திடும் போது
கவலையினுள் தோய்ந்திடும் உன் குடும்பம் பாரு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுக்குள்ளே நெருப்பாக உயிர் குடித்திடும் புகை
நாரில் மலராகக் குழந்தையை வாட்டிடும் புகை!

யாருக்குப் பயன் தரும் இந்தப் புகைத்தல்
பாருக்கும் பயனின்றிப் புகைந்திடும் புகைத்தல்!

வேறாக்கி அழித்திடும் உன் குடும்பத்தையே
சாறாக்கிப் பிழிந்திடும் உன் வம்சத்தையே!


உரத்துச் சத்தம் போட்டுச் சொல்வோம்
கருத்துக் கேட்டுப் பாடம் கொள்வோம்!

புகைத்தலால் நமக்கென்ன பயனுண்டு கேளீர்
புகையிலையால் நாம் கண்டதென்ன பாரீர்!

குடியுயர்த்த குடிமகனும் மடிந்திடுவான் எளிதில்
படிந்திட்ட புகையால் கண்டிடும் நோயும்!

என்ன செய்வோம் ஏது செய்வோம்?
நன்மை செய்வோம் நாம் இன்று செய்வோம்!

புகைத்தலைப் பகைப்போம் புகைதனைப் பகைப்போம்!
நகைத்தலை விடுப்போம் நானிலத்தில் வாழ்வோம்!
நாம் அனைவரும் நலத்துடனே நானிலத்தில் வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவி பிறந்த நல்ல கூடு

நடுநிசியின் இருளினில்
நலம்பாடும் இதயங்களில்
இயல்பான கனவுகளில்
இணைந்திடும் உயிர்கள்!

கருவறையின் கறுப்பறையில்
உருவெடுத்த திருக்கருவும்
சிற்றெறும்பாய்த் திரிந்திடும்
சற்றேனும் மகிழ்ந்திடும்!

கனவில் நிலைத்த கண்ணும்
நினைவில் செழித்த மனதும்
நிறைந்த எங்கள் வாழ்வும்
நிலையாய்க் கிடந்த காலம்!

பேரிருள் மூண்டு வந்து
காற்றலையாய்க் கடல் திரண்டு
மேட்டு நிலமெல்லாம் கடலாகி
வீட்டை வீணாகவே கரைத்தது!

தொண்டைக்குள் சிக்கிய வார்த்தைகள்
அச்சத்தில் உறைந்திட்ட விழிகள்!
நெஞ்சுக்குள் நிறைந்த துயரம்
கரையெல்லாம் காடான அகோரம்!

போருக்குள் பொத்தி வைத்ததைக்
கடலுக்குக் காவு கொடுத்தோம்!
கரையெல்லாம் எதைத் தேடுகின்றோம்
குருவி பறந்த எஞ்சிய கூடுகள் எங்கே?

கடலிடமும் பதிலில்லை
காலனிடமும் பதிலில்லை
யாரிடமும் பதிலில்லை
என்னிடமும் பதிலில்லை

குருவி பறந்து போனது
குருதி பாயும் கிறிஸ்துவிடம்
சிலுவையின் இரத்தம்
எம்மினத்திற்கு மட்டும் சொந்தம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணங்கள் நூறானாலும் எண்ணங்கள் மாறா!

காற்று நிறைந்த இந்தப் பூமியில்
நேற்றும் இன்றும் மலர்ந்த போதும்
வாக்கு சுத்தமாக இருந்தால் நாமும்
வாழ்வைச் சுகமே வாழலாம் இங்கே!

எங்கும் நிறைந்த பூமியில் நாளும்
எத்தனை நிறங்கள் தெரிகின்றன
அத்தனை அழகிலும் அழகாய்த் தெரிவது
மத்தியமான வெள்ளை நிறம் என்போம்!

மனிதம் எங்கென்று தேடி நிதம்
மண்ணில் நாமும் அலைகின்றோம்!
மனிதம் வேறெங்குமில்லை இந்தோ
பணியும் மனத்தில் தெரிகிறது மனிதம்!

அன்புடன் வாழ்வோம் இங்கே நாமும்
அகிலத்தை அன்பால் என்றும் ஆள்வோம்!
பாசத்தை இதயத்தில் இருத்திப் பார்த்துப்
பார் புகழும் பண்பை வளர்ப்போம்!

எங்கெல்லாம் நிறங்கள் தெரிந்தாலும்
எங்குமே அழுகுதான் நிறைந்திருக்கும்!
சின்னக் குழந்தை மனத்தில் நித்தம்
சிந்திக் கிடப்பதும் பண்பின் நிறமே!

முதன்மை நிறங்கள் அழகு தந்திடும்
முத்தான பூமியில் நாமும் இருக்கின்றோம்!
வித்தியாசப் பார்வையுடன் விழித்திருப்போம்
சத்தியமாய் எண்ணங்கள் மாறாது காப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவிலங்கை வாழ வைப்போம்

மண்ணில் இறைவன் மகிழ்ந்தே படைத்த
மனிதனுக்கு இணையான மின்னும் மிருகங்கள்
கண்ணின் மணிபோல் கானகத்தைக் காத்திடும்
காவலாளி தொழிலாளி காட்டின் மிருகங்கள்
நரியாய்ப் பிறந்து நயவஞ்சகம் செய்தாலும்
நல்ல மிருகமது இறைவனின் படைப்பது
யானையாய்ப் பிறந்து தும்பிக்கை காட்டினாலும்
நாமிங்கு அதைப்பார்த்து நம்பிக்கை வளர்ப்போமே!

மானின் மருளலில் கலைவடிவம் காண்போம்
கானின் அழகினில் காவியம் பார்ப்போம்!
தாயின் கருணையைக் காட்டியே சிங்கமும்
மானின் குட்டியை வளர்ப்பது காண்போம்!
கரடியும் அழகான குழந்தையாய்ப் பழகிடும்
புரவியும் உலகிலே புதுமைகள் படைத்திடும்
காண்டா மிருகமும் நல்லவை காண நடந்திடும்
தீண்டா இம்மிருகங்கள் எம்மைத் தேடிடும்!

கூண்டின் புலியும் உறுமியே தன்நிலை
நீண்டிடும் நேரத்தில் நிஜமாய் உரைத்திடும்!
பாம்பும் கீரியும் பாசத்துடன் சண்டையிடும்
அணிலும் மரம்தாவி அழகு காட்டிடும்!
மயிலும் அழகுடன் மயங்கியே ஆடிடும்
குயிலும் பாட்டாலே குவலயம் ஆண்டிடும்!
கிளியும் மைனாவும் செண்பகமும் இப்புவியில்
துளியும் பயமின்றித் துள்ளல் காட்டிடும்!

பூச்சியும் எறும்பும் புழுவும் தவழ்ந்திடும்
ஆட்சியைப் பிடித்திடும் ஆகாயப் பறவைகள்!
மாட்சியுடன் காட்டிலே மாண்புடன் வாழ்ந்திடும்
விருட்சமாய் யாவும் வளர்ந்திடக் காப்போம்!
இத்தனை சிறப்புடன் அழகான காட்டிலே
வித்தைகள் காட்டிடும் விசித்திர மிருகங்கள்!
கட்டியம் கூறிடும் காட்டின் நர்த்தனங்கள்
காத்திட விழைவோம் நாட்டின் நல்லவர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

தாயின் கருவில் தங்கு முன்னே தந்தை என்னைத் தாங்கினார்
சேயாய் என்னைத் தன்னில் ஏற்றுச் சிந்தை குளிர்ச்சி காட்டினார்!
பட்டுமேனி கொண்ட என்றன் பஞ்சு உடலைத் தீண்டியே
தொட்டுத் தூக்கி நித்தம் தோளில் போட்டுத் தாலாட்டினார்!

கண்ணில் நீர் கசிந்தால் என்னைத் தூக்கிக் கவனத்துடன்
தன்னில் அணைத்துத் தங்கமெனக் கொஞ்சி மகிழ்ந்து
வாழ்த்தினார்!
விண்ணில் என் பெயர் உயரத் தன்னை வருத்தித் தினம் தினம்
என்னைத் தனது வாரிசாக்கி உலகுக்குகே காட்டினார்!

சின்ன எனது பிஞ்சு மனது நொந்து போகும் வேளையில்
அன்னம் தந்து கொஞ்சம் எனது துன்பம் தன்னைத் தீர்த்திட்டார்!
பண்ணில் பாட்டு சொல்லித் தந்து என்னை நித்தமும்
மண்ணில் நல்ல மைந்தனாக்கி வாழும் வழி கூட்டிட்டார்!

அருமைச் செல்வம் எனது அன்பில் தன்னை மறந்து சிரித்திடும்
பெருமைக்குரிய எனது அன்புத் தந்தைக்கு ஈடில்லையே!
விருந்து தந்து சுகமும் தந்து வேதனையும் நீக்கியே
கரும்பு போல இனிமை வாழ்வு தருவார் யாருமில்லையே!

குறும்பு குற்றம் என்று நானும் குழப்படிகள் செய்திட
விரும்பி ரசித்த போதும் என்னைத் தண்டிக்க எண்ணியே
பிரம்பு கொண்டு அடித்துப் பிறப்பில் என்னைத் திருத்தியே
நரம்பாக என்னோடுகூட நின்றஎன் ஆசைத் தந்தையே!

என் தந்தைக்கு நிகரில்லை இவ்வுலகில் என்றுமே
தனது உழைப்பை எனக்காகத் தந்த என்றன் தெய்வமே
மனது போற்றும் உங்கள் வாழ்வின் கனவுகளை நிஜங்களே
சினந்தபோதும் என்னை மன்னிக்கும என்றன் தந்தையே!

எட்டுத் தடியை ஒன்றாக்கி வைத்துக் கட்டிப் பாருங்கள்
தட்டுத் தடுமாறி அந்தக் கட்டை ஒடித்துத் தான் பாருங்கள்!
ஒரு தடி தனித் தடியாக நின்று ஒடிந்து முறிந்துவிடும்
பிறிதொரு கட்டுத்தடி என்றுமே தானாக முறியாது என்றார்!

ஒற்றுமைக்கு உரிய நல்ல அறிவுரைகள் சொல்லியே
வேற்றுமைகள் களைந்து தினமும் வாழ்ந்திடுங்கள் என்றாரே!
நாற்றுகள் நாங்கள் இங்கே நிமிர்ந்து நின்றிருக்கக்
காற்றுவழி போன என்தந்தை சொல்மிக்க மந்திரமில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம்

கண்களில் தெரிவதும் நீயே
கருணையில் வருவதும் நீயே!
கன்னத்தில் வடிவதும் நீயே
கவிதையில் நிறைவதும் நீயே!
பல்லக்கில் அமர்வதும் நீயே
பாடையில் அழுவதும் நீயே!
அன்னையின் மடியிலும் நீயே
அன்பின் அணைப்பிலும் நீயே!

தன்னலமற்ற பாசமும் நீயே
தண்ணீர்த் தாகமும் நீயே!
குருவின் கைகளில் நீயே
தெருவின் முனையிலும் நீயே!
ஏழையின் ஏக்கத்தில் நீயே
வாழையின் பழத்திலும் நீயே!
இருளில் ஒளியாக நீயே
கருவில் நிறமாக நீயே!

மனிதனைக் காப்பதும் நீயே
மாசில்லாக் காவலும் நீயே!
தனிமையாய் நிற்பதும் நீயே
தவித்து வாழ்வதும் நீயே!
குவலயம் ஆள்வதும் நீயே
குரலில் நிறைவதும் நீயே!
சிலையில் நிற்பதும் நீயே
சித்திரமாய்த் தங்குவதும் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசாங்கில் நிற்பதும் நீயே
பாசமாகி மலர்வதும் நீயே!
தேசாந்த வாழ்வும் நீயே
தேடி அலைவதும் நீயே!
நோயில் படுத்திடும் நீயே
நொந்தழும் அன்பும் நீயே!
பாயில் கிடப்பதும் நீயே
பாவமாய் அழுவதும் நீயே!

பொருளாய் இருப்பதும் நீயே
கருவாய்ப் பிறப்பதும் நீயே!
அருளாய் நிறைவதும் நீயே
மருளும் உலகமும் நீயே!
பஞ்சணைச் சுகமும் நீயே
பாசக் கர்வமும் நீயே!
அமுதத் தேனும் நீயே
அன்பான பாசமே நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே என் தாய்த் தமிழ்?

எம் தாய்த் தமிழுக்கு இத்தனை கொடுமையா?
எம் சந்ததி பிறந்த போது சபிக்கப் பட்டதுவோ?
பண்பட்ட என் செம்மண் கண்ணி வெடி விழைந்ததுவோ?
பிணக்குவியலுடன் என் காலடிகள் சவக்குழிகளாயினவோ?

அம்மா என்றழைத்த குழந்தைக்குக் குரல் தரத் தாயங்கில்லை!
அப்பா என்று தேடிய மகனருகில் அப்பாவுக்கும் உயிரில்லை!
அண்ணாவும் போய், அக்காவும் போய், மாமா, மாமி
ஆச்சி அப்புவுக்கும் உயிரில்லை! என் தாய் மண்ணில்
விடிவில்லை!

என் தாய் நிலத்து மண்ணில் பூத்த பூக்களும்
சிறு வண்டுகளும்நான் விளையாடிய என்
நினைவிடங்களும் காணாமல் போக
கண்ணீருடன் தவித்துக் கைகட்டி நின்று புலம்பிக்
கடவுளைக் கேட்கிறோம் ஏன் எம்மினத்திற்கு இந்தச்
சோதனை?

என் நாட்டின் கொடுங் கோலாட்சியினரின்
தாம் தோன்றித் தனமான போக்குடன்
என் பெற்ற தாய் நாட்டில் வாழவழியின்றி
அனாதைகளாகித் திசைமாறி வந்தோமே!

என் தமிழினத்தின் குருதி படர்ந்த செம்மண்ணிலே
வீரச் சாவென்று இளைஞர்களை இழந்தோமே!
நாளைய உலகத்தைக் காக்கும் எம் சந்ததிகள்
செத்து மடிந்திடாமல் உணர்வுடன் காத்திடுவோம்!

இறந்து கிடக்கும் என் இளம் சந்ததியின் உடலங்களின் மேல்
உயிரற்ற கோலத்திலும் காமத்துடன் உற்றுப் பார்க்கும்
காமப் பாதகர்களின் செயலைக் கொய்திடுவோம்!
பாசத்துடன் நம் உறவுகளின் உயிர்ச் சாந்திக்கு வேண்டுவோம்!

காட்சிகள் நிறைந்த கண்களின் அருகில்
சாட்சிகளாக இருக்கும் சாந்தமான இமைகள்
மாட்சிமை சொல்லிடும் மாயக் கண்களால்
ஆட்சியைக் கண்டிடும் ஆகாயக் கனவுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்துடன் கண்கள் தேடிடும் காட்சிகள்
நிதானத்துடன் நெஞ்சை நிறைத்திடும் போது
புலன்களின் உணர்வினால் புதுமை தந்திடும்
நிஜங்களின் பகிர்விலே நெஞ்சம் மலர்ந்திடும்!

நல்ல ஒலியினை நயமாய்க் காது இரசிக்கும்
சொல்ல முடியாச் சந்தோசம் சுகம் தரும்!
வல்ல நிகழ்வாகவே வாழ்வு நிதம் தொடரும்
எல்லையில்லாத இன்பம் எங்கும் நிறையும்!

கரையிலிருக்கும் அலையினால் கடல் கொந்தளிக்கும்
கரையற்ற ஆழ்கடலில் கவலையின்றி அலையிருக்கும்!
அற்புதச் சக்தியினால் ஆழ்கடல் அமைதிபெறும்
விற்பனத் தன்மைகளை வேண்டி நாம் பெறுவோம்!

மலர் பூத்த தோட்டத்தில் வண்டுகள் தேடிவரும்
மலர்ச் செடிகள் மகிழ்ச்சியிலே மாண்புடன் சிரித்திருக்கும்!
எப்போது பூத்திருக்கும் குறிஞ்சிக்கும் மதிப்பிருக்கும்
என்றென்றும் மலர்ந்திடும் சாமந்தியும் மதிப்பிழக்கும்!

கணநேரச் சங்கதிகள் சரித்திரமாய் இடம்பிடிக்கும்
கண்ணிமைக்கும் நேரத்தில் கவனங்கள் மாறி நிற்கும்!
உண்மை தரும் விளக்கம் உயிருக்கு உரமாகும்
வெண்மை தருமழகில் உலகம் மயக்கம் பெறும்!

இருள் கவ்விப் பரவ ஒளி மறைந்து மருகிவிடும்
இருள் இருந்த இடத்தில் இருட்டு கவனம் பெறும்!
ஒளி வந்து பரவ இருள் கலைந்து மறைந்துவிடும்
ஒளி மறைந்து இருளில் உலகு நிறைவுபெறும்!

ஈற்றில் உலகை ஆளப் போவது இருள் தெரியுமா?
மாற்றிப் பார்த்தாலும் கண்களில் ஒளி தெரியுமா?
என் கண்கள் இருந்தாலும் விழிப்பாவை பார்க்குமா?
என் கண்ணே! ஒளி இருக்கும்போதே பார்த்து ரசியம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மறப்பது என் ஆச்சியை!

எங்கே மறப்பது என் ஆச்சியை?
சதா அவரது நினைப்புத்தான்!
பாசம் காட்டிச் சிரிக்கும்போது
பொக்கை வாய் கதை சொல்லும்!

என் சின்னஞ்சிறு சிரிப்பைத் தேடித்
தன் நெஞ்சில் ஒரு கோட்டை கட்டி
அதற்குள் தன் ஜீவனைப் புதைத்து
எனக்காக வாழ்ந்த என் ஆச்சி!

அதிகாலை எழுந்து கடவுளைத் தொழுது
தேனீருக்குத் தண்ணீர் அடுப்பில் வைத்து
மாடு கறந்து பால் காய்ச்சி
அவர் போடும் சுக்குக் கோப்பி
சொல்ல நா உருசி தேடும்!

காலைக் கடன் முடித்துக்
கால் நடை நடந்து
கடும் பயணம் தொடர்ந்து
மீன் வாங்கிச் சமைத்து உணவளித்துக்
காத்த அப்பையாவின் வாழ்வு!

கிழக்குப் பக்கத்தில் கட்டிவைத்திருந்த
கோழிக் கூண்டில் முட்டை தேடி
முடிந்து போன இளமைக் காலங்கள்
நடந்து போன முதுமைக் கோலங்கள்!

"மிளகாய்ப் புட்டி" என்றும் அதில்
ஒரு தோட்டக் கிணறும் கிண்டி
காய்கறித் தோட்டமும் செய்த வாழ்க்கை
அவரது முதுமையின் கதை சொல்லும்!

தென்னம் பாளை விளக்குமாற்றால்
முற்றம் கூட்டி, சாணி தெளித்துச்
சுள்ளி பொறுக்கிப் பாய் பின்னிக்
காலங்கள் யாவுமே காணாமல் போனது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் கட்டில் வரப்பு மேட்டில்
கரிசல் காட்டில் களத்து மேட்டில்
தினமும் மறைந்திடும் அவளது
இனிய மாலைப் பொழுதுகள்!

மண்ணெண்ணெய் விளக்கு ஏற்றி
விடிய விடிய விழித்திருந்து
பாய், பெட்டி, கிடுகு முடைந்து
முடிந்து போகும் அவளது இரவுகள்!

''ஜேனோ'' என்று ஏக்கமாய் என்னை
எங்கிருந்தோ என்னை அழைப்பதாய்
ஆழ்மனத்தின் ஏதோ எல்லையிலிருந்து
என் ஆச்சியின் குரல் கேட்கிறது!

ஆசையாய்த் தேடி அலைகிறேன்!
பாசமாய் என்னைப் பாராட்டி
நேசத்துடன் செவ்விளநீர் எண்ணெய் தடவித்
தலை வாரிவிட்ட ஆச்சியைத் தேடுகிறேன்!

விறகு அடுப்பும் இல்லை இங்கே
விடியல் கிறங்க வைப்பதும் இல்லை
இழந்த இளமை நினைவுகளுடன்
இறந்து போன என் ஆச்சியின் நினைவுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைவான் கூப்பிடு தூரம்

கைப்பிடியற்ற குடையின் கீழே நாம்
கைப் பிடியின்றித் தினமும் நடக்கின்றோம்!
செப்படி வித்தைகள் நிதம்கற்றே
இப்படி வாழ்க்கை இன்று வாழ்கின்றோம்!

பறந்து திரிந்திடும் பசுங்கிளியும் தன்
பாதத்தின் பிடிப்புடன் பாங்காகக் கிளையமரும்!
வேதாந்தியாக அலைந்திடும் வேங்கையும் தானே
நினைத்த உணவுக்காக நிஜமாகக் குறிவைக்கும்!

நம்வீட்டு விளக்கும் அயல்வீட்டு விளக்கும்
சொந்தம் கொண்டாடியே சொல்லிக் கதைபேசும்!
எரிந்திடும் பிணமும் எழுந்திருந்து படுத்திடும்
சிரித்திடும் குழந்தையும் சில மணியில் அழுதிடும்!

எங்குமே நிறைந்திட்ட எல்லையற்ற இன்பத்தில்
மிஞ்சிடும் உலகத்தின் மகிழ்ச்சி பொங்கிடும்!
கண்களை நிறைத்திடும் காட்சிகள் அகன்று
விண்ணிலே தினமும் வித்தைகள் விழைந்திடும்!

நியதிகள் உலகின் நிறைவாகிக் கிடந்திட
மறதிகள் இங்கே மலிவாக இருக்கின்றன!
ஆயிரம் நினைவுகள் அடுக்கியே வந்தாலும்
பாதகமில்லை வாழ்வு பாசமாக நிலைக்கின்றது!

உடல்சக்தி குன்றி ஊட்டம் குறையும் போது
உருத்திராட்சக் கொட்டையும் உரம் தந்திடும்!
இங்கேயே இப்போதே இன்றே வாழ்வோம்
சங்கத் தமிழில் சந்தமென்றும் பாடுவோம்!

வசந்தங்கள் மாறிமாறி வந்து போனாலும்
நிஜங்கள் எம்மை நிறைத்து நின்றாலும்
குழப்பம் வேண்டாம் குணமுள்ள நண்பர்களே
குடைவானம் கூப்பிடு தூரம் கேளுங்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்கும் எலிக்கும் கல்யாணம்

எலிக்கும் எலிக்கும் கல்யாணம்
எங்கள் நாட்டிலும் கல்யாணம்!
தங்கள் வாழ்வின் கல்யாணம்
தாமே தேடிடும் கல்யாணம்!

கனேடிய மண்ணிலும் கல்யாணம்
காணும் நாள்களில் கண்டிடலாம்!
குளிரில் நடுங்கிடும் வேளையிலும்
கும்மாளம் போடும் கல்யாணம்!

ஓடும் ரயில் பாதையிலும்
ஓடி ஒளித்திடும் எலிக்கூட்டம்!
பாடி பணிந்து ஆடிடும் ரயிலின்
பாட்டுக் கேட்டு வாழும் கூட்டம்!

எனக்குள் தினமும் என்னை நானும்
எண்ணிப் பார்த்துக் கேட்டதுண்டு!
எப்படி இந்தச் சத்தம் சந்தடியில்
இப்படிச் சந்ததி பெருக்குகின்றனவோ?

உறவுகள் நிறைந்த உலகினில்
குறைவாய் வாழ்ந்திடும் எலிக்கூட்டம்
உலக நோய்கள் தீர்ந்திடவே
உயிரைத் தந்திடும் எலிக்கூட்டம்!

சாலை மேடு பள்ளமெங்கும்
சாதி மதமின்றிப் பாய்ந்தோடும்
நேயமுள்ள நல்ல எலிக்கூட்டம்
பாசவாழ்வு வாழும் எலிக்கூட்டம்!

அரிசி பருப்பு கடலையென்று
வரகு சாமி குரக்கனென்று
நிறைவாய்க் கொறித்து மகிழ்ந்து பின்
விரைவாய் ஓடி மறைந்திடுவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்திடும் எலிகள் நடுவீட்டில்
நாடி அடங்கியே தவித்திடும் வீட்டார்
மேசை மேலேறி எலிஎன்று கத்தும்
மோசமான நிகழ்வுகளும் இங்கு நடந்திடும்!

எலிக்கென்று ஒரு கோயில் இருக்குது
இந்திய மண்ணின் வடநாட்டில்!
இறையாய் எண்ணி வழிபட்டே
இசையும் பாடி மகிழ்ந்திடுவார்!

எலிகள் எங்கிருந்தால் எமக்கென்ன?
வலிகள் வந்திருந்தால் எமக்கென்ன?
அதுவும் இம்மண்ணின் ஓரினம்தான்
இதையும் ஏற்றிடும் நம்மனம்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடித் தேடி

கோழிக் கூட்டுக்குள் நுழைந்து திரிந்து
கோழி முட்டை தேடித் தேடி
முடிந்து போன என் ஆச்சியின்
முத்தான இளமைக் காலம்!

அறிவைத் தேடித் தேடி நிதம்
அழகாய் உடை உடுத்திப் பின்னர்ப்
பள்ளிக்கு நடந்த நாள்கள் மீண்டும்
துள்ளிக் குதித்து வரவா போகின்றன?

இழந்த நாட்டை மண்ணை மறந்து
சொந்த நாட்டை விட்டுப் பிரிந்து
இந்த நாட்டில் தஞ்சம் புகுந்த
எங்கள் வாழ்வின் விடியலின் தேடல்!

காற்றைச் சுமந்து வாழ்ந்திடும் போதும்
மாற்றான் தோட்டத்தில் மலராய் வாழ்ந்து
எத்தனை நாள்கள் இந்த வாழ்வென்று
ஏங்கிடும் மனத்தில் ஏனிந்தத் தேடல்?

கலைந்து முடிந்த கனவும் தேடிக் - கடவுள்
காலைப் பிடித்த நிலைதேடி- தினம்
உயிரைக் கொடுத்துப் பணத்தைத் தேடி - மனிதன்
உழைத்து மாய்ந்திடும் பயன்தான் என்னே!

எத்தனை விதமான இதயத்துத்
தேடல்கள் தினம்தினம் - இந்த
உலகினில் பிறந்து வளர்ந்திடும்
நாள்களில் நமக்கென்று - இனி

மண்ணை மதித்து மனதும்
திருந்தி வாழ்ந்துவிட்டால் - என்றும்
விண்ணை அளந்து வீரநடைபோட்டு
வெல்லலாம் விதியை இப்பாரினிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு நிகரிங்கே யார்?



அன்னை தந்திட்ட அரும்பாலின் சுவையினை
எண்ணிப் பார்த்திடும் என்சின்ன நெஞ்சு - இத்தரையில்
கண்ணெனக் காத்திட்ட தெய்வமாம் தாயை
மண்ணிலே பார்த்திடு வேன்நான்!

நோயிலே நான்கிடந்து தவித்திட்ட போதும்
பாயிலே வீழ்ந்து அழுதிட்ட வேளை - செல்லமே
என்று என்னைச் சீராட்டிப் பாராட்டிய
அன்னைக்கு நிகரில்லை உலகில்!

தாயே மரியே! தருவாய் வரமே!
மாதா அன்னையே மகிழ்வாய் உனையே
ஓதும் எனையும் அணைப்பாய் நிதமே!
சூதறி யாமகன் சொர்க்கம் நீர்தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையில் தொங்கும் தியாகம்!

சமாதானப் புறா ஒன்று
சமாதியான நாள் இன்று!

பாசம் வைத்த மனிதருக்காய்
பலிக்கடாவான மனித தெய்வமிங்கே!

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு
இன்னொன்றையும் காட்டச் சொன்னார்!

ஏற்றத் தாழ்வினை இல்லாது களையென்றார்
நாற்றமெடுக்கும் சமுதாயம் வேண்டாமென்றார்!

தன்னைத் தாழ்த்திப் பிறரை உயர்த்தி
விண்ணிலே உன்னை நிலை நிறுத்தென்றார்!

வலக்கை செய்வதை இடக்கைக்குச் சொல்லாதே
இலக்கை அடைந்திட ஈகையைச் செய்யென்றார்!

இரு கள்வர் நடுவிலே சிலுவை மரமேற்றி
இரு கைகளிலும் அறையப்பட்டன ஆணிகள்!

தாழ்வைப் போதித்த தலையிலே கிரீடம் கொண்டார்
சமத்துவம் போதித்துச் சாட்டையடி தானே பெற்றார்!


அன்பு செய்ய அழைத்திட்ட அன்னைமரி மைந்தனுக்கு
அணைத்து மகிழ்ந்திட நாம் தந்தது சிலுவை மரமன்றோ!

பாசத்தின் போதனைக்குப் பாதத்தில் ஆணி தந்தோம்
வறியோரை வாழ்விக்க வழி சொன்ன தெய்வமகன்!

தனக்கென வாழாத தங்க மெழுகுத் திரியொன்று
உருகி ஒளி வழங்கி எரிந்து கருகிய நாளின்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசையா



உன்னைத் தேடி நான் காத்திருக்க
ஒவ்வொரு விடியலைத் தினம் பார்த்திருக்க
கண் திறந்து பாராயோ யேசையா!
என் துன்பம் தீராயோ யேசையா
கருணையின் நாதனே யேசையா!
கடைக்கண் பாரும் யேசையா!

எனக்குள் துன்பம் வந்து எழுந்து விழ
உனக்குள் என் துன்பம் விழுந்து மறைய
கனக்கும் என் இதயம் சுமக்கும் வேதனையைக்
குறைக்கும் எண்ணம் உனக்கிலையோ யேசையா!

உன்விழிப் பார்வை என் மீது பட்டு
என்துன்பம் தீர்ந்து நான் இன்பம் பெற
கனவாகும் என் துன்பம் நிஜமாகும் வாழ்வு
நினைவெல்லாம் நீயே நிறைந்திடு யேசையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிஞரைப் பற்றி...

இலங்கை கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டபோதும் தந்தை கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் தொழில் செய்தமையினால் கொழும்பில் கல்வி கற்றார்.

80களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலும் மற்றும் வீரகேசரி, சிந்தாமணி, தினகரன் போன்ற பத்திரிகைகளிலும் புஸ்பராணி அந்திரேஸ், பரந்தன், கலைப்புஸ்பா போன்ற பெயர்களில் கவிதை, சிறுகதை, நாடகம், ஈழத்துப் பாடல்கள் என்று எழுதியுள்ளார். 82இல் தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றார். 82 முதல் 87 வரை இந்தியா பெங்களூரில் தனது இளநிலைக் கல்வி கற்று, அங்கிருந்த அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றார். பின் 88 முதல் 89 வரை கொழும்பு ஈஸ்வரன் அன் பிறதர்ஸ்''ல் கடமையாற்றினார். 89 மே மாதம் கனடா வந்து இங்கு ''மோகன் அன் மோகன்'' சட்ட நிறுவனத்தில் கடமையாற்றினார். 90களில் மேலும் பல நிறுவனங்களிலும் பணியாற்றினார்.

98இல் M.C.S.C. கற்று அன்று முதல் பல வங்கி நிறுவனங்களில் கடமையாற்றுகிறார். இவரது பொழுது போக்குகள் வானொலி, தொலைக் காட்சிகளில் செய்தி வாசிப்பது, கவியரங்குகள், பட்டிமன்றங்களில் கலந்துகொள்வது, பத்திரிகை, புத்தகம் வாசிப்பது, கவிதை எழுதுவது, புகைப்படம் எடுப்பது, முதியோரைக் கனம் பண்ணி அவர்களுடன் நேரம் போக்குவது, முதியோர் இல்லங்களில் தொண்டு செய்வது என்று நீண்டுகொண்டு போகின்றது. இது தவிர ''சந்த வசந்தம்'' போன்ற இணையக் கவியரங்குகளிலும் பங்கேற்று வருகிறார்.

இது கவிஞரின் கன்னி முயற்சியான படைப்பே. இன்னும் இவரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org